# செந்தூவல்

அரசியல் துறையில் தமிழன் அடிமைப்பட்டுத்தான் வாழ வேண்டுமென்றால் அது மேல் நாட்டானுக்கு அடிமைப்பட்டாலும், வட நாட்டானுக்கு அடிமைப்பட்டாலும் அதில் வேறுபாடு இல்லை.

- தந்தை பெரியார்




தி. பி 2049 மடங்கல் (ஆவணி, கி.பி 2018 ஆக.- செப்.) | தனிச்சுற்றுக்கு மட்டும் | நன்கொடை உரூ. 10/= | இதழ்: 2


## படர்ந்து வரும் பார்ப்பனிய பாசிச இருள்

பாசக தலைமையிலான மோடி அரசின் 4 ஆண்டுகால ஆட்சி சந்தி சிரித்து வருகிறது. இவற்றையெல்லாம் திசை திருப்பிவிட்டு மீண்டும் எப்படியாவது ஆட்சிக்கு வந்துவிட வேண்டுமென எத்தனிக்கிறது காவிக்கும்பல். அதற்கான வேலையில் முழுவீச்சுடன் இறங்கியுள்ளது. அரசின் மக்கள் விரோதச் செயல்களை அம்பலப்படுத்துபவர்களையும், மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடுபவர்களையும் பாசிசச் சட்டங்கள் மூலம் அடக்கிவிடலாம் என முயற்சிக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், சனநாயக உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்துவரும் கவிஞர் வரவர ராவ், வழக்கறிஞர் சுதா பரத்வாஜ், பேராசிரியர் வெர்ணன் கன்சால்வேஸ், வழக்கறிஞர் அருண் பெரிரா, பத்திரிக்கையாளர் கௌதம் ஆகியோரும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் படுகொலையை ஐ.நா அவையில் அம்பலப்படுத்திய மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியும் கொடூரமான ஊபா (UAPA) சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மணற் கொள்ளை, கனிமக் கொள்ளை போன்றவற்றை அம்பலப்படுத்திய சுற்றுச்சூழல் ஆர்வலர் தோழர் முகிலன் கைது, கேரள வெள்ள நிவாரண நிதி திரட்டிய மாணவி வளர்மதி கைது, தமிழக வாழ்வுரிமை இயக்கத் தலைவர் தோழர் வேல்முருகன் கைது, விவசாயிகளுக்கு ஆதரவாகப் பேசிய நடிகர் மன்சூர் அலிகான் கைது, பெரியார் `இந்திய தேசிய’ கொடியை எரித்த படத்தை முகநூலில் பதிவிட்டதற்காக தற்சார்பு விவசாயி சங்க தலைவர் தோழர் பொன்னையன் கைது என இப்படிப்







பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இந்த மக்கள் விரோத பாசிச மோடி அரசுக்கு எதிராக யார் பேசினாலும் அவர்கள் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுகிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் தீவிரவாதிகள் அதிகரித்துவிட்டதாக கதறுகிறார்கள் பாசகவின் சூத்திர அடிமைகளான பொன்னாரும், தமிழிசையும். ஒரு கருத்தை பேசினாலே அதனை தீவிரவாதம் என கூறும் இவர்கள் யார்?

இந்தியாவில் ஆரியப் பார்ப்பன மேலாதிக்கத்தை தொடர்ந்து நிலை நாட்ட, பொதுமையர்கள், அனைத்து இடதுசாரி முற்போக்கு சனநாயக சக்திகளைக் கொலை செய்வது, மதக்கலவரங்களைத் தூண்டிவிட்டு அப்பாவி மக்களைப் படுகொலை செய்வது, தனக்கு எதிரான கருத்துள்ளவர்களை - அது காந்தியே ஆனாலும் - சுட்டுக் கொல்வது இதுதான் ஆர்.எஸ்.எஸ் பரிவாரங்களின் அன்றாட வேலைமுறை. இந்துத்துவா போர்வையில் மதவாதக் கொடுநெறி (பாசிசக்) கொள்கையையுடன் செயல்படும் இந்த அமைப்புகளின் அரசியல் கட்சிதான் பாரதீய ஜனதாக் கட்சி. இவர்களுக்கு தீனி போட்டு வளர்ப்பது இந்தியத் தரகு முதலாளிகளும், உலகெங்கிலும் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களும். இந்து சாதியப் படிநிலையில் உள்ள சாதி ஆதிக்கவாதிகளின் துணையோடு, அனைத்து இடதுசாரி முற்போக்கு சனநாயக சக்திகளையும், தாழ்த்தப்பட்ட மக்களையும், மதச் சிறுபான்மை மக்களையும், பல்வேறு இந்திய தேசிய இனங்களையும், மலைவாழ் மக்களையும் ஒடுக்குவது, அவர்களுடைய வளங்களைக் கொள்ளையடிப்பது போன்றவைதான் இவர்களுடைய இந்துத்துவா “தேசியவாதக் கொள்கை”.





வடக்கே அண்ணல் அம்பேத்கரும், தெற்கே தந்தை பெரியார் போன்றவர்களும் இவர்களை சமூக அறிவியல் ரீதியாக அம்பலப்படுத்தி, கருத்தியல் ரீதியாக எதிர்த்துப் போராடி வந்தவர்கள். அம்பேத்கரியத்தையும், பெரியாரியத்தையும் எதிர்கொள்ள முடியாமல் இந்த இந்துத்துவா வாதிகள் அவர்களுக்கு எதிரான நச்சுக் கருத்துகளை இன்னும் பரப்பி வருகின்றனர்; விலங்காண்டித்தனமான செயல்களில் இன்னும் ஈடுபட்டு வருகின்றனர். அதற்காக முதலாளித்துவ ஊடகங்களை தன் கைப்பாவையாக மாற்றிவிட்டனர். மத்தியிலும் சில மாநிலங்களிலும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளதைப் பயன்படுத்திக்கொண்டு கொடூர தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். 1992 இல், 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வரலாற்றுச் சின்னமான “பாபர் மசூதியை” இடித்துத் தள்ளி தன் குரங்குப்படையை (பஜ்ரங்தள்) ஏவிவிட்டு நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தனர். 2002 இல் கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மோடியின் குஜராத்தில் 2000 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களைக் கொன்று குவித்தனர். சட்டத்துறையையும், நீதித் துறையையும் கொண்டு உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்காமல் மாநிலத்தின் முதல் அமைச்சரே சிறுபான்மை மக்களுக்கு எதிராக ரௌடிகளையும், காவல் துறையையும், பாஜக குண்டர்களையும் பயன்படுத்தி வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டதை ஒரு பாசிஸ்ட் மட்டுமே செய்ய முடியும். தமிழ் நாட்டிலும் அதுபோன்ற கலவரத்தை நடத்தி அரத்தம் குடிக்கத் திட்டமிட்டு, அண்மையில் தமிழ்நாட்டிலும் “ர(த்)த யாத்திரை” யைத் தொடங்கினர்; தமிழகத்தின் அனைத்து இடதுசாரி, முற்போக்கு சனநாயக சக்திகளின் கடும் எதிர்ப்பால் “குரங்குப்படை” தன் வாலைச் சுருட்டிக்கொண்டு வடக்கே ஓடிவிட்டது.

அண்மையில் (13/08/2018) தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் தலைவர்களில் ஒருவரான உமர் காலித் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. குடியரசுத் தலைவர் மாளிகை, நாடாளுமன்ற அலுவலகம் அருகே உள்ள “கான்ஸ்டிட்யூசன் கிளப்” புக்கு வெளியே இது நடந்தது. உயர் பாதுகாப்புப் பகுதியில் நாடாளுமன்ற கட்டடத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் இச்சம்பவம் நடந்துள்ளது. ஆனால் சம்பவம் நடந்து கால் மணி நேரத்திற்குப் பிறகுதான் காவலர்கள் அங்கு வந்துள்ளனர். இசுலாமியரான இவர் ஒரு நாத்திகவாதி; இடதுசாரி சிந்தனையாளர். அதேபோல் கன்னட எழுத்தாளரும், பத்திரிகையாளருமான பி. கவுரி லங்கேஷ், கர்நாடக முற்போக்கு இயக்கத்தில் மிக முக்கியமான ஆளுமையாக இருந்தவர். பார்ப்பனிய மடங்களும், சாதி ஆதிக்கமும், சனாதனமும் நிறைந்த கர்நாடகத்தில் தன் கவிதைகள், நாடகங்களின் மூலம் சீர்த்திருத்தக் கருத்துக்களை விதைத்தவர் லங்கேஷ். சமூகநீதியை நிலைநாட்ட `லங்கேஷ் பத்திரிகை’ என்ற வார இதழைத் தொடங்கி தீவிரமான அரசியல் கட்டுரைகளை எழுதிவந்தவர். இந்துத்துவ எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, மூட நம்பிக்கை ஒழிப்பு உள்ளிட்டவற்றுக்காக முதல் ஆளாக கவுரி லங்கேஷ் களத்தில் நின்று போராடியவர்.

நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, எம்.எம்.கல்புர்கி ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து குரல் கொடுத்தவர். மறைந்த கன்னட எழுத்தாளர் யு.ஆர். அனந்தமூர்த்தி கொலை மிரட்டலுக்கு ஆளானபோது, அவருக்குத் தைரியமூட்ட தினமும் வீட்டுக்குப் போய் வந்தார். `மாதொருபாகன்’ நாவலுக்காக பெருமாள் முருகனை சாதிவெறி அமைப்பினர் மன்னிப்பு கேட்க வைத்தபோது, அவருக்காக கர்நாடகத்தில் கவுரி லங்கேஷ் குரல் கொடுத்தார். ரோஹித் வெமூலா சாம்பலாக்கப்பட்டபோது, `குற்றவாளிகளைத் தண்டியுங்கள்’ என்று கொதித்தெழுந்தார்.

இவரைச் சுட்டுக் கொன்ற ஒரு இந்துத்துவா பயங்கரவாதியை காவல்துறை தற்போது தளைப்படுத்தியுள்ளது. அவனிடமிருந்து ஒரு `கொலைப் பட்டியலையும்’ காவல்துறை கைப்பற்றியுள்ளது. பாசக - ஆர்.எஸ்.எஸ் கும்பலுக்கு எதிராக செயல்படும் அனைவரையும் கொலை செய்வதுதான் இவர்கள் திட்டம்.

இதற்காக ஆர்.எஸ்.எஸ் இல் உள்ள ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கு ஆயுதப் பயிற்சி உள்ளிட்ட எல்லாப் பயிற்சிகளும் அளித்து அனைத்து சனநாயகவாதிகளுக்கும் எதிராகப் பயங்கரவாதச் செயல்களைத் தூண்டி விடுகிறது. இவர்கள்தான் தமிழ்நாட்டில் தீவிரவாதிகள் ஊடுருவி விட்டனர் என்கிறார்கள். தமிழ்நாட்டின் வளங்களை தில்லி ஏகாதிபத்தியமும், பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களும் தங்கு தடையின்றிக் கொள்ளையடிக்க தமிழ்நாட்டின் இடது சாரிகளும், சனநாயக ஆற்றல்களும் தடையாக உள்ளார்கள் என்பதாலேயே தமிழிசையும், பொன்னாரும் தீவிரவாதப் பூச்சாண்டி காட்டி வருகின்றனர்.

மத்தியில் தாங்கள் அதிகாரத்தில் உள்ளதைப் பயன்படுத்திக் கொண்டு அனைத்து ஊடகங்களையும் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டுள்ளது பாசக. சனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்கு எதிராக கோயபல்சை மிஞ்சுமளவிற்கு பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. பொதுமையர்கள், சனநாயகவாதிகளுக்கு எதிரான பொய்ப்பிரச்சாரம்தான் எப்போதும் பாசிஸ்டுகளின் அரசியல் ஆய்தமாக இருக்கிறது. இவர்கள் சட்டத்தையும், நீதியையும் என்றுமே மதிப்பதில்லை. நீதித் துறையையும் தன் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டனர். அண்மையில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் செயல்பாடுகளுக்கு எதிராக நான்கு உச்ச மன்ற நீதிபதிகள் ஒன்று சேர்ந்து வெளியிட்ட அறிக்கையே இதற்குச் சான்று.

எனவே, தமிழக மக்கள் விழிப்போடிருந்து இந்துத்துவா பாசிசத்தை முறியடித்தாக வேண்டும். தில்லியின் எடுபிடி தமிழ்நாட்டு எடப்பாடி அரசு காவி பயங்கரவாதத்திற்குத் ஆதரவாகச் செயல்பட்டு வருகிறது. தமிழக மக்களின் சனநாயகப் போராட்டங்களை காவல்துறையைக் கொண்டு ஒடுக்கி வருகிறது. மக்களை வீடு புகுந்து மிரட்டுவது, சமூக முன்னணியாளர்களைக் கைது செய்வது, சிறைப்படுத்துவது, பொய் வழக்குகள் புனைவது, கொலை செய்ய முயற்சிப்பது போன்ற கொடுநெறி (பாசிச) நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. ஆனால் பாசிஸ்டுகள் என்றும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. இத்தகைய ஒடுக்குமுறைகள் மூலம் மக்களின் எழுச்சியை தடுத்துவிட முடியாது. அது மீண்டும் மீண்டும் எரிமலையாக வெடித்துக் கொண்டுதான் இருக்கும். ●

# தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையும் - இந்துத்துவா அரசியலும்

இந்து சமய அறநிலையத்துறை தொடர்பான சர்ச்சை இப்போது மீண்டும் செய்திகளில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஏற்பட்ட தீ விபத்தைத்(?) தொடர்ந்து தமிழகக் கோயில்களில் இருந்து இந்து சமய அறநிலையத்துறை வெளியேற வேண்டும் என்று இந்துத்துவா பாஜகவின் சில தலைவர்கள், ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் பரிவாரங்கள் கூறி வருகின்றன. உண்மையில் இது பாரதீய ஜனதா கட்சியின் நீண்ட காலக் கோரிக்கை.

அவ்வப்போது இவர்கள் இக்கோரிக்கையை எழுப்பி வந்தாலும், அண்மையில் கேரள அரசு தாழ்த்தப்பட்ட ஒருவரை அர்ச்சகராக நியமித்தது மற்றும் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தீ விபத்து இவர்களை மீண்டும் அறநிலையத் துறைக்கு எதிராகப் பேச வைத்துள்ளது. எனவே தமிழக கோயில்களையும், அதன் நிருவாகத்தையும் இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருகிறார்கள். இந்து சமயம் என்பதும் இந்துக்கள் என்பவர்களும் ஆரியப் பார்ப்பனர்களே என்பது வெள்ளிடை மலை. தமிழர்களுக்கே உரிமையான தமிழ்நாட்டு கோயில்களையும் அதன் சொத்துக்களையும் பார்ப்பனர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் கோரிக்கை. உண்மையில் இந்து என்ற சொல்லே ஆங்கிலேயர்கள் அவர்களின் நிருவாக வசதிக்காக உருவாக்கியதுதான். ஆண்டைகளின் துணையுடன் மக்களை சாதி ரீதியாக பிறப்பின் அடிப்படையில் ஒடுக்கிவந்த பார்ப்பனர்கள் இந்து என்ற போர்வையில் மீண்டும் முழு ஆதிக்கம் செய்யத் துடிக்கிறார்கள் என்பதின் வெளிப்பாடே இது.

இசுலாமிய, கிறித்துவ, சீக்கிய மதக் கோயில்கள் அவர்களாலேயே நிருவகிக்கப் படும்போது இந்துக் கோயில்களை மட்டும் அரசு நிருவகிப்பது இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்கிறார்கள். உண்மையில் இசுலாமிய வழிபாட்டு நிறுவனங்களின் சொத்துக்கள் இந்திய வக்பு சட்டம் 1954 இன்படி அமைக்கப்பட்ட மத்திய வக்பு வாரியத்தின் மூலமே நிருவகிக்கப்படுகிறது. இதன் தலைவராக இருப்பவர் மத்திய சிறுபான்மை நலத்துறை அமைச்சராக இருக்கும் பாஜகவைச் சேர்ந்த முக்தார் அப்பாஸ் நக்வி என்பவர். இவ்வாரியத்தின் கீழ்தான் மாநில வக்பு வாரியங்கள் இயங்குகின்றன. கிறித்துவ தேவாலயங்களின் சொத்துக்கள் இந்துக் கோயில்களைப் போல் தமிழக மக்களின் உழைப்பு மற்றும் அன்றைய மன்னர்களின் கொடை, மானியங்களால் உருவானதல்ல. இவை வெளிநாட்டு கிறித்துவ மிசனரிகள் மற்றும் வெளிநாட்டவர்கள் நிதியால் உருவாக்கப்பட்டவை. இவை சனநாயக ரீதியாக அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களால் இயங்குபவை. இவைகளுக்கு பெரிய அளவில் சொத்துக்கள் இல்லை என்பதாலும் சிறுபான்மையினர் என்பதாலும் இங்கே நடக்கும் ஊழல்கள் வெளியே தெரிவதில்லை.

பாசகவின் சுப்பிரமணியசாமி இந்தக் கோரிக்கையை முன்வைத்து உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. தேசபக்தி - தெய்வபக்தி என்று மதவாத அரசியல் நடத்தும் பாஜக மற்றும் அதன் சங்பரிவாரங்கள் தமிழக கோயில்களை விட்டு அரசின் அறநிலையத்துறை வெளியேற வேண்டும் எனக் கூறுவது ஏன்? இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி மதச்சார்பற்ற இந்திய அரசில் இந்துத்துவாவைத் திணிக்கும் அதாவது பார்ப்பனிய மனுநீதி சட்டத்தைப் புகுத்தும் இவர்கள் தமிழகக் கோயில்களிலிருந்து அரசு வெளியேற வேண்டும் என்று கூச்சலிடுவது ஏன்? தமிழக திருக்கோயில்களில் இருந்து அரசு வெளியேற வேண்டும் என்று சொல்லும் இவர்கள் அரசியலிலிருந்து மதத்தை வெளியேற்ற மறுப்பது ஏன்? இவர்களின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் முதலில் நாம் இந்து சமய அறநிலையத் துறை உருவான வரலாறு என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்து சமய அறநிலையத் துறை கருணாநிதி காலத்தில் உருவாக்கப்பட்ட சட்டமோ அல்லது திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கொண்டு வரப்பட்ட சட்டமோ அல்ல. தமிழகக் கோயில்கள் அரசின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்ட வரலாறு கிழக்கிந்திய கம்பெனி காலத்திலிருந்தே தொடங்குகிறது. தமிழ்நாடு சட்டம் 22 / 1959 என அழைக்கப்படும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் தமிழ்நாட்டில் உள்ள இந்து கோயில்களை மட்டுமல்ல சமணக் கோயில்கள் மற்றும் சமயம் சார்ந்த அற நிலையங்களை நிருவகிப்பதற்கான சட்ட அதிகாரத்தைத் தருகிறது. பிற்காலத்தில் தமிழக மக்களை இந்து என்று பொதுமைப்படுத்தலுக்கு முன்னர் சிவனியம் (சைவம்), மாலியம் (வைணவம்), சமணம் போன்ற சமய நெறிகளே கோலோச்சி வந்தன. நிலக்கிழாரிய மன்னர்களால் திருக்கோயில்களுக்கு மானியமாக அளிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நிலங்கள் மற்றும் சொத்துக்களை ஆரியப் பார்ப்பனர்களும், ஆதிக்க சாதியினரும் அனுபவித்து வந்தனர். நிலக்கிழாரிய மன்னர்களை இறுதியாக ஆங்கிலேயர்கள் முறியடித்து தங்கள் அதிகாரம் மற்றும் ராணுவ பலத்தால் இந்தியாவை உருவாக்கினர். அன்றைய இந்தியா உலக வரைபடத்தில் பிரிட்டிஷ் இந்தியா என்றே அழைக்கப்பட்டது. பல்வேறு இனம், மொழி, பண்பாடு, வழிபாடு, வேலைப்பிரிவினை ஆகியவற்றைக் கொண்டிருந்த மக்களை ஒற்றைச் சொல்லால் இந்து என்றனர் அந்நியர்கள். தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக் கொண்ட ஆரியப் பார்ப்பனர்கள் மத ரீதியாகக் கூட மக்கள் ஒன்றுபட்டுவிடக்கூடாது என்று ஏற்கனவே இருந்த வேலைப்பிரிவினைகளை சாதியாக மாற்றி முன்னால் இந்து என்ற சொல்லைச் சேர்த்தனர். அதாவது இந்து-வேளாளர், இந்து-முதலியார், இந்து-பறையர் என்பதாக. இவ்வாறு ஒரு மதமாகக்கூட தமிழர்கள் ஒன்று சேர்ந்து விடக்கூடாது என்பதே அவர்கள் நோக்கம். ஆனால் தங்களை மட்டும் பிராமணர் என்றே அழைத்துக் கொண்டனர்; இந்து-பிராமணர் என்று சொல்வதில்லை. ஆகவே இந்துக்கள் என்பவர்கள் பிராமணர்கள் மட்டுமே என்பது தெளிவு. இன்றும் தமிழகத் திருக்கோயில்களில் பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகராக முடியும். கருவறைக்குள் அவர்கள் மட்டுமே நுழைய முடியும். அரசனானாலும், அதிகாரியானாலும் கருவறைக்குள் செல்ல அனுமதியில்லை. இந்தப் பின்னணியில் இந்து சமயக் கோயில்களுக்கு தொடக்கம் முதலே இருந்து வருகின்ற பல்லாயிரம் ஏக்கர் நிலங்களும், சொத்துக்களும் எவ்வாறு நிருவகிக்கப் படுகின்றன என்பதை ஆய்வு செய்வோம்..

தமிழகத் திருக்கோயில்களை நிருவாகம் செய்வதில் பிராமணர்கள் மற்றும் நிலவுடைமைச் சாதிகளின் ஆதிக்கம் மட்டுமே இருப்பதாகவும் ஊழல்கள் மிகுந்து காணப்படுவதாகவும் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் இருந்தே புகார்கள் எழுந்தன. அப்போது ஆட்சி செய்த மன்னர்களிடமும், கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகத்திடமும் இது தொடர்பாக சமூக முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் ஏராளமான புகார்களை கொடுத்துள்ளனர். இந்நிலையில 1817 இல் முதன் முறையாக மதராஸ் நிலைக்கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசு பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த சட்டமானது திருக்கோவில்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி முதலான அறக்கொடைகள் முறையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் தனிப்பட்டோர் நலன்களுக்காக பயன்படுத்தப்.படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வழிவகை செய்தது. இந்த அதிகாரம் அப்போதிருந்த வருவாய் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் தொடங்கி 1849 ஆம் ஆண்டுக்குள் 21 ஜில்லாக்களில் இருந்த 8828 கோயில்களில் சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஊழல் புரிந்த அறங்காவலர்கள் (தர்மகர்த்தாக்கள்) பணி நீக்கம் செய்யப்பட்டனர். மூடிக்கிடந்த கோயில்கள் வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டன. 1858 இல் இந்தியாவின் நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் மகாராணியிடம் நேரடியாகச் சென்றது. தங்கள் மீது இந்திய மக்களுக்கு இருந்த வெறுப்பை குறைக்கவும் நம்பிக்கையை வளர்க்கவுமான தேவை அப்போதைய பிரிட்டிஷ் மகாராணிக்கு இருந்தது. இதனால் அவரது நிருவாகம் மத விவகாரங்களில் பிரிட்டிஷ் அரசு தலையிடாது என்ற வாக்குறுதியை அளித்தது. இதனால் ஏற்கனவே கோயில்களும் அவற்றின் சொத்துக்களும் யார் வசம் இருந்தனவோ அவர்கள் தங்கு தடையின்றி அவற்றை அனுபவிக்கத் தொடங்கினார்கள்.

புகார்கள் பெரிய அளவில் வந்தாலும் கூட இந்திய சாதி அமைப்பையும், அதில் ஆதிக்க சாதி மற்றும் பார்ப்பனர்களின் மேலாண்மையையும், அதனுடன் பின்னிப் பிணைந்திருந்த கோயில் விவகாரங்களையும் பிரிட்டிஷ் அரசு வெளியில் இருந்தே அனுகியது; உள்ளே தலையிடவில்லை, அதேநேரம் கோயில்களின் உள்ளே இருக்கும் விலைமதிப்பு மிக்க தங்க நகைகள், விக்ரஹகங்கள் உள்ளிட்டவை தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும், சொத்துக்களில் ஊழல் மலிந்துவிட்டதாகவும் பொதுமக்கள் புகார் கொடுப்பது மட்டும் தொடர்ந்து கொண்டே இருந்தது. குறிப்பாக கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை அறங்காவலர் (தர்மகர்த்தா) உள்ளிட்ட கோவில் நிர்வாகிகள் கோவில் நிலங்களை நிருவகிப்பதின் வழியே கிடைக்கும் வருவாயை அரசு கஜானாவிற்கு கொண்டு சேர்க்காமல் முறைகேடு செய்தனர். இதன் மூலம் கோவில் நிலங்கள் ஏலத்திற்கு வந்தன. அப்படி ஏலத்துக்கு வரும்போது குறைந்த விலைக்கு அவர்களே வேறு நபர்கள் மூலம் வாங்கிக் கொண்டார்கள். விசாகப்பட்டினம் முதல் திருநெல்வேலி வரை இப்படி அப்பட்டமாக முறைகேடு செய்து கோயில் சொத்துக்களை கொள்ளையடித்த 65 வழக்கு விவரங்களை நான் தொகுத்து வைத்திருக்கிறேன்; ஆர்வமுள்ளவர்கள் படித்துக் கொள்ளலாம் என்றார் அன்றைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்.

இந்நிலையில் இந்தியாவின் இரண்டு முக்கியமான சீர்திருத்தங்கள் நடைபெற்றன. ஒன்று 1919 இல் நடைபெற்ற மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்; இரண்டாவது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட பிராமணர் அல்லாதாரின் அமைப்பு நீதிக்கட்சியாக உருவெடுத்த நிகழ்வு. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் விளைவாக இந்தியாவில் இரட்டை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் நாடு முழுவதும் தேர்தல் நடத்தப்பட்டது. அந்த வகையில் 1920 இல் நடைபெற்ற மதராஸ் மாகாண தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. பனகல் அரசர் ராமராய நிங்கர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அப்போது மதராஸ் மாகாணத்தில் இருந்த அனைத்து திருக்கோயில்களையும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சி செய்தார். இதற்காக 1922 இல் இந்து பரிபாலன சட்டத்தை முன்மொழிந்தார். இதற்கு காங்கிரஸ் கட்சியிலிருந்தும், உயர் சாதி அமைப்புகளிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் எழுந்தன. அவற்றை எதிர்கொண்டு சமாளித்து 1925 இல் இந்து பரிபாலன சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தினார். அவற்றை ஏற்க மறுத்து பெரும் எதிர்ப்புகள் எழுந்த நிலையில் அந்த மசோதா மீது 800 திருத்தங்களை சட்டமன்றத்தில் கொண்டு வந்தனர். அந்த 800 திருத்தங்களில் 500 திருத்தங்களை கொண்டு வந்தவர் அன்றைய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த சத்தியமூர்த்தி ஐயர் என்ற பார்ப்பனர். (இவர்தான் அன்று சட்ட அவையில் முத்துலட்சுமி அம்மையார் கொண்டுவந்த தேவதாசி ஒழிப்பு தீர்மானத்திற்கு எதிராய் நின்றவர் என்பது குறிப்பிடத் தக்கது). அந்த எதிர்ப்புகளையும் மீறி இந்து பரிபாலன சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் பனகல் அரசர் முனைப்புடன் இருந்தார். இறுதி கோரிக்கையாக திருப்பதி கோயிலில் மட்டுமேனும் விட்டுவிட வேண்டும் என்ற கோரிக்கை அழுத்தமாக எழுந்தது. அதையும் பனகல் அரசர் நிராகரித்தார். மதத்தில் அரசு தலையிடுவதாக குற்றம் சாட்டிய சத்தியமூர்த்தி அய்யர் ஆண்டவனை சட்டம் போட்டுக் கட்டுப்படுத்துவதா என ஆவேசமாகக் கேட்டார். சத்தியமூர்த்தியின் நிலைப்பாட்டை ஆதரித்து அறநிலையத்துறை சட்டத்தை எதிர்த்த சுதேசமித்திரன், இந்து உள்ளிட்ட பார்ப்பனிய செய்தியேடுகள் சட்டத்தை கண்டித்து கடுமையாக தலையங்கங்களை எழுதின. எனினும் முதலமைச்சர் பனகல் அரசர் அப்போதைய வைஸ்ராய் இர்வினிடம் எடுத்துச் சொல்லி இந்த சட்டத்திற்கான ஒப்புதலைப் பெற்றார். இறுதியில் 1927 இல் இந்து சமய அறநிலைய வாரியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

அதன்படி திருகோயில்களின் ▶

**தமிழகம் முழுக்க உள்ள அனைத்து பெரிய கோயில்களும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் சிதம்பரம் நடராசர் கோயில் மட்டும் ஒரு நூற்றாண்டுக்கும் மேல் சர்ச்சைக்குரியதாக தொடர்ந்து வருகிறது. 1885 ஆம் ஆண்டிலேயே சிதம்பரம் கோவில் தொடர்பாக வழக்கு நடந்துள்ளது. 1951 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றம் சிதம்பரம் கோயில் தனிச் சொத்து அல்ல அதற்கு எந்த ஆதாரமும் இல்லை என தீட்சிதர்களுக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளது. இதைத்தொடர்ந்து அப்போது முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராசா, சிதம்பரம் கோயிலை சட்ட வரம்பிற்குள் கொண்டுவர ஆணை பிறப்பித்தார். ஆனால் அந்த ஆணைக்கு நீதிமன்றத்தில் தடையாணை பெற்ற தீட்சிதர் தரப்பு தொடர்ந்து கோவிலை தங்கள் வசமே வைத்திருந்தது. பிறகு 1987 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் சிதம்பரம் கோயிலை அரசு எடுத்துக் கொண்டு செயல் அலுவலரை நியமித்தது. இதை எதிர்த்து நீதிமன்றம் சென்றனர் தீட்சிதர்கள். பல ஆண்டுகள் நடைபெற்ற இந்த வழக்கில் பல்வேறு மேல் முறையீடுகளுக்குப் பிறகு 2009 ஆம் ஆண்டு சிதம்பரம் கோயிலை அரசு எடுத்துக்கொண்டது செல்லும் என தீர்ப்பளித்தார் நீதியரசர் பானுமதி. கோயில் நிருவாகத்தை ஏற்று நடத்த ஒரு வார காலம் அவகாசமும் தந்தார். ஆனால் அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி தீர்ப்பு வந்த அன்று மாலையே சிதம்பரம் கோயிலை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். இதன் மீதும் தீட்சிதர்கள் மேல் முறையீடு செய்தனர். உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடைபெற்றது. ஆனால் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு சிதம்பரம் கோயில் மீதான தமது உரிமையை நிலைநாட்டுவதில் ஆர்வம் செலுத்தவில்லை. வழக்கில் வாதாட வேண்டிய தமிழக அரசின் வழக்கறிஞர்கள் ஏன் பின்னால் அமர்ந்திருக்கிறீர்கள் என உச்ச நீதிமன்ற நீதியரசர்களே கேட்டனர். இதைத் தொடர்ந்து சிதம்பரம் கோயிலை அரசு எடுத்துக்கொண்டது செல்லாது உடனே தீட்சிதர்கள் வசம் கோயிலை ஒப்படைக்க வேண்டும் என 2014 இல் தீர்ப்பளித்தது நீதிமன்றம். இப்போது வரை சிதம்பரம் கோயில் மட்டும் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இல்லாமல் தீட்சிதர்கள் எனப்படும் தில்லை பார்ப்பனர்கள் வசமே இருந்து வருகிறது.**

நிருவாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வாரியத்திடம் வழங்கப்பட்டது. அதைப்போலவே நிருவாகம் சரிவர நடைபெறாத கோயில்களுக்கு அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரமும் வாரியத்துக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து 1947 முதல் 1949 வரையிலான இரண்டாண்டு காலம் ஓமந்தூர் ராமசாமி சென்னை ராஜதானியின் முதலமைச்சராக இருந்தார். அப்போது தமிழகக் கோயில்களில் நடந்த எண்ணற்ற ஊழல்கள், முறைகேடுகளை எதிர்த்து பல நடவடிக்கைகளை அவர் எடுத்தார். வைணவ நெறிகளைப் பின்பற்றிய முழு ஆத்திகவாதியான ஓமந்தூரார் கோயில்களும், மடங்களும் ஊழலின் ஊற்றுக்கண்ணாக மாறிவிட்டதால்தான் நாட்டில் நாத்திகம் வளர்கிறது என்று நினைத்தார். இதனால் அறநிலையத்துறை சட்டங்களில் மேலும் பல திருத்தங்களைக் கொண்டு வந்தார். கோயில் சொத்துக்களை குறைந்த குத்தகைக்குக் கொடுப்பதை முற்றிலுமாக தடுத்து நிறுத்திய ஓமந்தூரார், மடங்களில் உள்ள நகைகள் பதிவேட்டில் பதிப்பிக்கப்பட்டு அரசுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றார். இந்து சமய மற்றும் தர்ம ஸ்தாபன பரிபாலன வாரியம் என்ற பெயரில் இருந்த அமைப்பை மாற்றி அதை ஒரு அரசாங்கத் துறையாகக் கொண்டுவந்தார். இந்துக் கோயில்கள் மட்டுமின்றி சமணர்களுடைய கோயில்களையும் அறநிலையத்துறையின் கீழ் கொண்டு வந்தவர் ஓமந்தூரார்தான். அப்போதும் மத விவகாரங்களில் அரசு தலையிடக்கூடாது என கடும் எதிர்ப்பு எழுந்தது. இதை ஏற்றுக்கொள்ளாத ஓமந்தூரார், தேவதாசி ஒழிப்பு மசோதா, அரிசன ஆலயப் பிரவேச மசோதா போன்றவை கொண்டு வரப்பட்டபோதும் இதையேதான் சொன்னார்கள்; இந்த எதிர்ப்பு கூச்சல்களை ஏற்க முடியாது; மதத்தின் பெயரால் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தங்கள் மதத்திற்கே தீமை செய்பவர்கள் எனக் கடுமையாகச் சாடினார். எனினும் ஓமந்தூராரின் ஆட்சி இரண்டு ஆண்டுகளே நீடித்தன. பிறகு 1951 இல் மெட்ராஸ் இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி கீழிருந்து மேலாக அதிகார மட்டங்கள் நிருணயிக்கப்பட்டு அதிகாரிகள் நியமிக்கப்படவும், தலைமை அதிகாரியாக ஆணையர் ஒருவரை நியமிக்கவும் வழிவகை செய்யப்பட்டது. அதிகாரிகளின் நிருவாக எல்லைகளும் வரையறுக்கப்பட்டன. பிறகு 1954 இல் முதல் அமைச்சராக பொறுப்பேற்ற காமராசர் இந்து சமய அறநிலையத் துறையில் மேலும் பல மாற்றங்களைக் கொண்டுவந்தார். முதன்மையாக போக்குவரத்து, அரிஜனர் நலம், இந்து அறநிலையத்துறை அமைச்சராக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பரமேசுவரனை நியமித்தார். இவர் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னோடி தலைவரான இரட்டைமலை சீனிவாசனின் பேரன் ஆவார். 1959 இல் காமராசர் ஆட்சிக்காலத்தில் அறநிலையத்துறையின் முந்தைய சட்டங்களின் பெரும்பான்மையான குறைகள் களையப்பட்டு தற்போது உள்ள சட்டமான 'தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை சட்டம்' இயற்றப்பட்டது.

"அர்ச்சகன் பொறுக்கித் தின்ன ஆண்டவன்", "அதிகாரி பொறுக்கித் தின்ன அரசாங்கம்" என்பார் தந்தை பெரியார். பார்ப்பனர்கள் சில பணக்காரர்களையும், பார்ப்பனிய அதிகாரிகளையும் கைக்குள் வைத்துக் கொண்டு தமிழக மக்களின் கோயில் சொத்துக்களை கொள்ளையடித்து வருகின்றனர். சிலை திருட்டு மற்றும் கடத்தல் முதல் தங்களுக்கு ஒத்துவராத ஊழியர்களை கொலை செய்வது வரை பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு இந்திய தரகுப்-பார்ப்பனிய வல்லரசும் பாதுகாவலனாக உள்ளது. இவர்களின் கொள்ளையை மேலும் முழுமையாகச் செய்ய தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை தடையாகவுள்ளது பார்ப்பனர்களுக்கு எரிச்சலையும், கோபத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. அதனாலேயே தமிழகக் கோயில்களிலிருந்து இந்து சமய அறநிலையத்துறை வெளியேற வேண்டும் என்று இந்து மதவாதக் கும்பல்கள் கூச்சலிடுகின்றனர். தமிழ்மக்கள் விழிப்போடிருந்து இந்தக் கும்பலை கோயில்களிலிருந்து மட்டுமல்ல; தமிழ்நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும். கோயில் சொத்துக்கள் மற்றும் ஆலய வழிபாட்டு உரிமையை அனைத்து மக்களுக்குமான உடைமையாக, உரிமையாக மாற்றப் போராட முன் வரவேண்டும். ●

### தில்லியின் கொள்ளைக்கு

# சொத்து வரி உயர்வு

தமிழகத்தில் 1998 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை சொத்துவரி உயர்த்தப்படாத காரணத்தினால் சொத்துவரியை உயர்த்த வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி இல்லை என்றும்,




ஆதலால் சொத்து வரியை உயர்த்த வேண்டும் என்ற வாதம் தமிழக அரசினால் முன்வைக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சொத்துவரியை உயர்த்த ஆணையிட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி தமிழக அரசு சொத்து வரியை 50% லிருந்து 100% வரை உயர்த்தியுள்ளது. இந்த உத்தரவு அக்டோபர் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரும்.

தமிழகத்தில் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் உள்ளன. இப்பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்ப சொத்து வரி, குடிநீர் வரி, கழிவுநீர் வரி ஆகியவை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்பட்டு வருகின்றன. அண்மைக்காலமாக குப்பைக்கும் கூட வரி வசூலிக்கப்படுகிறது. சென்னையைப் பொறுத்தவரை 12 லட்சம் பேர் குடியிருப்பு, குடியிருப்பு அல்லாத கட்டிடங்களின் பேரில் சொத்து வரி செலுத்தி வருகின்றனர். இதன்மூலம் ஆண்டுக்கு ரூ.540 கோடி அளவுக்கு வருவாய் ஈட்டப் படுகிறது. இதே போல், மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளிலும் அந்தந்த பகுதிக்கு ஏற்ப வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப் பட்டு வருகிறது. இதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்குச் சொத்து வரி 50 விழுக்காடு உயர்த்தியும், வாடகை குடியிருப்புக் கட்டடங்களுக்கு 100 விழுக்காடு உயர்த்தியும், குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கு 100 விழுக்காட்டுக்கு மிகாமலும் சொத்து வரியை உயர்த்தி வசூலிக்கும் வகையில் புதிய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் தமிழகத்தில் வீட்டு வாடகை எந்த வரைமுறையும் இல்லாமல் வீட்டு உரிமையாளர்களால் வசூலிக்கப்படுகிறது. இச்சொத்து வரி உயர்வு என்பது வாடகை வீட்டில் குடியிருப்பவர்களை மிகக் கடுமையாக பாதிக்கும். காரணம் இந்த வரி அவர்கள் தலையில்தான் சுமத்தப்படும். இதனால் வாடகை வீட்டில் குடியிருக்கும் ஏழை, நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இதுமட்டுமல்லாமல் கடை உட்பட வணிக நிறுவனங்களுக்கு 100 சதவீதம் மிகாமல் வரி விதிக்கப்படுவதால் வாடகை குடியிருப்பிலுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அதிக வாடகை கொடுக்க வேண்டி வரும்.

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தாததால் கடந்த ஓராண்டில் வழங்கப்பட வேண்டிய ரூ.3,558 கோடி நிதியை இந்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாத ஒவ்வொரு ஆண்டும் தமிழக உள்ளாட்சிகள் சுமார் ரூ.4,000 கோடியை இழக்கும். உள்ளாட்சித் தேர்தலை நடத்தாததால் ஏற்படும் இழப்புடன் ஒப்பிடும் போது சொத்துவரியை உயர்த்தாததால் ஏற்படும் இழப்பு என்பது மிக மிகக் குறைவு ஆகும்.

இப்படியிருக்க எதற்காக இந்த சொத்து வரி உயர்வு? தமிழ்நாட்டின் நிதி ஆதாரங்கள் அனைத்தும் இந்திய அரசால் திட்டமிட்டு, மிக வேகமாக சூறையாடப்பட்டு வருகிறது. மோடி கொண்டு வந்த ஜி.எஸ்.டி வரி விதிப்பு மாநில அரசுகளின் முக்கியமான வரி வருவாய்களை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு சென்றுவிட்டது. சாராயம், பேருந்து கட்டணம், எரிபொருள், சொத்துவரி ஆகியவற்றை உயர்த்தி தன்னுடைய வருவாயை பெருக்கிக் கொள்ள




வேண்டிய இழிவான நிலையில் உள்ளது தமிழக அரசு

இதனால் தமிழக மக்கள் தலையில் மேலும் மேலும் சுமையேற்றப்படுகிறது. தமிழகத்தின் மீதான இந்திய அரசின் இத்தகைய நிதி சூறையாடலுக்கு முடிவுகட்டவில்லையென்றால் விலைவாசி உயர்வையும், வரி உயர்வையும் தடுத்திட முடியாது. ●

# காங்கிரசுக்கு போஃபார்ஸ் - பா.ச.க விற்கு ரஃபேல்

1990 களின் இறுதியில் இந்திய விமானப் படையில் இருந்த மிக் ரக விமானங்கள் அனைத்தும் பழுதடைந்தன. இந்த வகை விமானங்கள் அனைத்தும் ரஷ்ய நாட்டில் இருந்து வாங்கப்பட்டவை. இவை பழுதடைந்ததன் காரணமாக மாறி வரும் உலக ஏகாதிபத்தியச் சூழலில் இந்திய அரசுக்கு நவீன வகையான போர் விமானங்கள் தேவைப்பட்டன. அதன்படி 2002 ஆம் ஆண்டு வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 126 போர் விமானங்களை வாங்க திட்டமிடப்பட்டது. இந்த போர் விமானங்கள் வாங்கும் ஒப்பந்தம் வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலேயே போடப்பட்டு விட்டது. அதன் பின் இந்த விமானத்தை இந்திய விமானப்படை 2011-ம் ஆண்டு வரை சோதித்துப் பார்த்தது. இந்த சோதனையின் அடிப்படையில் விமானம் வாங்க பரிந்துரைத்ததாக அன்றைய மன்மோகன்சிங் அரசு கூறியது.

இச்சோதனைக்கு இரண்டு வகையான விமானங்கள் இந்திய விமானப்படை சோதித்து பார்த்ததாக அன்றைய மன்மோகன் சிங் அரசு கூறியது. முதலாவதாக ஐரோப்பிய யூனியனில் உற்பத்தி செய்யப்பட்ட டைபூன் வகை விமானங்களை சோதித்து பார்த்தது. அதன்பின் இரண்டாவதாக அதற்கு இணையான ராஃபேல் வகை விமானங்கள் சோதனை செய்து பார்க்கப்பட்டது. இந்த இரு விமான வகைகளில் ராஃபேல் வகை விமானங்கள் தான் மிகச்சிறந்ததாக இருந்ததாக அன்றைய மன்மோகன் சிங் கூறியது. இந்த விமான ஒப்பந்தத்தை பிரான்ஸ் நாட்டுடன் போட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி மொத்தம் 126 விமானங்கள் வாங்க பிரான்சுடன்



உடன்பாடு எட்டப்பட்டது. முதலாவதாக 18 விமானங்களையும் உடனடியாக வாங்குவது என்றும், அதன்பின் பிரான்ஸ் அரசிடம் இருந்து, இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனத்திற்கு தொழில்நுட்பத்தை பெற்று இந்திய அரசே உற்பத்தி செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை மீண்டும் மார்ச் 2015 புதுப்பிக்கத்தக்க பிரான்ஸ் மற்றும் இந்திய அரசு ஒப்புக்கொண்டன. அதன்பின் இந்த ஒப்பந்தத்தின்படி காங்கிரஸ் அரசு ஒரு விமானத்தின் விலை ரூபாய் 526 கோடி செலுத்தி விமானத்தை பெற்றுக் கொள்வது என ஒப்பந்தம் போடப்பட்டது. முதலில் உடனடியாக 18 விமானங்களை பெற்றுக் கொள்வது என்றும், அதன்பின் இந்த ஒப்பந்தத்தை மார்ச் 2015 ஆம் ஆண்டு புதுப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மார்ச் 2015 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் மோடி அரசினால் மாற்றியமைக்கப்பட்டது. முந்தைய ஒப்பந்தத்தின்படி 18 விமானங்களை உடனடியாக வாங்குவது என்றும் மீதியுள்ள 108 விமானங்கள் பிரான்ஸ் நாட்டின் தொழில்நுட்ப உதவி பெற்று இந்தியாவிலேயே இந்திய நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனத்தின் மூலம் தயாரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. மோடி அரசு பதவியேற்ற பின் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் 36 விமானங்களை உடனடியாக பெற்றுக் கொள்வது என்றும், மற்றவை அனைத்தும் பராமரிப்பு மற்றும் உற்பத்தி அனைத்தும் அணில் அம்பானியின் ரிலையன்ஸ் ஏவியேஷன் நிறுவனம் செய்யும் என்றும் ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த புதிய ஒப்பந்தத்தின்படி விமானம் ஒன்றின் விலை 1676 கோடி. கோடிக்கு வாங்க முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் அரசுக்கு கிட்டத்தட்ட 48,000 கோடி ரூபாய் அளவுக்கு நட்டம் ஏற்படும்.

இதில் முதன்மையான விஷயம் ஏற்கனவே விமான உற்பத்தியிலும், அதனை பராமரிப்பதிலும் அனுபவம் பெற்ற அரசு பொதுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனத்திடமிருந்து எந்த ஒரு எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், எந்த முன் அனுபவமும் இல்லாத ரிலையன்ஸ் ஏவியன்ஸ் நிறுவனத்திற்கு தாரை வார்த்துள்ளது மோடி அரசு. இது போதாதென்று அடுத்த 15 முதல் இருபது ஆண்டுகளுக்கு விமான பராமரிப்புகள் அனைத்தும் ரிலையன்ஸ் ஏவியன்ஸ் நிறுவனம் செய்யும். இதற்காக ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு ஒரு லட்சம் கோடி அளவுக்கு பணம் செலுத்த உள்ளது இந்திய அரசு. ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை விட அதிக விலை கொடுத்து இந்த விமானத்தை வாங்க உள்ளது மோடி அரசு. இது போதாதென்று விமான உற்பத்தி மற்றும் பராமரிப்பு அனுபவம் இல்லாத ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு கொடுத்துள்ளது. இதைத்தான் ராகுல் காந்தி தலைமையிலான எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் எழுப்பினர். அப்போது இதற்கு பதிலளித்த ராணுவத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் "பிரான்ஸ் மற்றும் இந்தியாவிற்கு ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் ரகசியமானது. இதனை நாடாளுமன்றத்திலோ அல்லது பொதுவெளியிலோ வெளியிட முடியாது. மேலும் இது தேசத்தின் பாதுகாப்பு தொடர்பான விஷயம். இதை நாடாளுமன்றத்திலோ அல்லது பொதுவெளியிலோ விவாதிக்க முடியாது" என்று கூறினார். ஆனால் இந்த விவரங்கள் எல்லாம் பா.ச.க காங்கிரசை விட ஊழலில் ஒன்றும் சளைத்ததல்ல என்பதையே காட்டுகிறது. ●

# கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடிக்க
# சாலை போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு மசோதா:

மோடி தலைமையிலான பாஜக அரசு கொண்டுவரும் ஒவ்வொரு திட்டமும் சரி, சட்டமும் சரி ஒருபுறம் கார்ப்பரேட்டுகள் - தரகு முதலாளிகளுக்கு சேவை செய்வதற்கும், மற்றொருபுறம் பெருவாரியான உழைக்கும் மக்கள் - நடுத்தர மக்களை பிழிந்தெடுப்பதற்குமான வகையிலே உள்ளது. கார்ப்பரேட் நலன், மாநில அரசின் அதிகாரத்தை பறித்தல் என்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்துக்கொள்கிறது. அதற்கு மிக சிறந்த எடுத்துக்காட்டு சமீபத்தில் கொண்டு வந்துள்ள சாலை போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு மசோதா 2015 தான்.

போக்குவரத்து சட்டம்-1998ன் படி போக்குவரத்து துறையை அமைக்கவும், அதற்கான அதிகாரிகளை நியமிக்கவும் முழு அதிகாரம் பெற்று இருந்தது மாநில அரசு. தற்போது அதனை ஒழித்துக்கட்ட `தேசிய போக்குவரத்து ஆணையம்' ஒன்றை அமைக்க உள்ளது இந்திய அரசு. இவ்வாணையம் அமைக்கப்பட்டால் மாநில அரசின் கீழ் இருக்கும் போக்குவரத்து துறை டெல்லியின் ஆதிக்கத்திற்கு உட்படுவதுடன் முழுக்க தனியார்மயமாக்கப்படும். மேலும் `தேசிய போக்குவரத்து ஆணையம்' நாடு முழுவதும் உள்ள அனைத்து போக்குவரத்து வழித்தடங்களையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து அதனை தனியாருக்கு ஏலம் விடும். ஏலத்தில் எடுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள், பேருந்து கட்டணங்களை தாங்களே தீர்மானித்துக் கொண்டு தங்களுக்கு லாபம் வரும் வழித்தடத்தில் மட்டுமே பேருந்துகளை இயக்கும். இதனால் கிராமப்புற மக்கள் கடும் இன்னலுக்கு ஆளாவார்கள்.

மேலும் இச்சட்டத்தின்படி ஓட்டுநர் உரிமம், வாகன தகுதிச் சான்றிதழ், என அனைத்தும் தனியார் வசம் சென்றுவிடும். அதன்பின் அவர்கள் நிர்ணயிப்பதுதான் கட்டணம். தற்போது ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்கள் எத்தனை ஆண்டு அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும், புதிதாக தேசிய போக்குவரத்து ஆணையத்தின் மூலம் புதிய ஓட்டுநர் உரிமம் பெற வேண்டும். 39 வயதுக்கு மேல் ஓட்டுநர் உரிமம் கிடையாது. பின்னிருக்கையில் அமர்ந்து செல்பவர்களும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். சாலை போக்குவரத்தில் செய்யும் சிறு தவறுகளுக்குக் கூட மிக அதிகமான அபராதம் கட்ட வேண்டி இருக்கும். முதல் தவறாக இருப்பின் 5 ஆயிரமும், தொடர் தவறாக இருப்பின் 6 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும். மதுகுடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் 15 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை அபராதமும், 3 ஆண்டுகளுக்கு சிறை தண்டனையும் விதிக்கப்படும். போக்குவரத்து சிக்னலை மூன்று முறை மீறினால் 15 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும். ஓட்டுநர் உரிமமும் ரத்தாகும். பாதுகாப்பற்ற முறையில் வாகனத்தை ஓட்டினால் ஒரு லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும். அதோடில்லாமல் ஒரு ஆண்டு சிறை தண்டனையும் கிடைக்கும். மேற்கண்ட விதிமுறைகளை பார்த்தாலே தெரியும் இவை அனைத்தும் கொள்ளையடிப்பதற்கு உருவாக்கப்பட்ட சட்டங்கள் என்பது.

மேலும் இம்மசோதாவில் வாகனங்கள் பராமரிப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டு உள்ளது. வாகனங்களின் உதிரிபாகங்கள் பழுதடையும்போது, அவ்வாகனம் தயாரித்த நிறுவனத்தின் உதிரிபாகத்தை மட்டுமே பொருத்த வேண்டும். வேறு உதிரிபாகங்களை பொருத்தினால் அது சட்டப்படி குற்றம் ஆகும். வாகனம் பழுதடையும் போது, வாகனம் தயாரித்த நிறுவனத்தின் பணிமனையில்தான் நாம் பழுது பார்க்க வேண்டும். உதாரணமாக ஹோண்டா நிறுவனம் தயாரித்த இரு சக்கர வாகனத்தில் ஏதேனும் உதிரிப்பாகம் பழுதடைந்தால், ஹோண்டா நிறுவனத்தின் பணிமனைக்கு சென்று ஹோண்டா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உதிரிபாகங்களையே பொறுத்த வேண்டும். இதன்முலம் சிறு, குறு உதிரிப்பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்கள், உதிரிபாகங்கள் விற்கும் கடைகள், பணிமனைகள் அனைத்தும் இழுத்துமூட வேண்டிவரும். இந்நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் மற்றும் வாகன பழுதுபார்ப்பவர்கள், வண்ணம் பூசுபவர்கள் என அனைவரும் வேலையிழந்து நடுத்தெருவுக்கு தள்ளப்படுவர்.

இச்சட்டத்தின் படி ஓட்டுநர் பயிற்சி பள்ளி 15 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவ சோதனைக்கூடம், பணிமனை (ஒர்க்சாப்) போன்றவையுடன் இருக்க வேண்டும். இதற்கு மூலதனம் அதிகம் தேவைப்படும். எனவே, வாகனம் தயாரிக்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மட்டுமே இதை நடத்த முடியும். தற்போது இருக்கும் பயிற்சி பள்ளிகளை மூடிவிட வேண்டியதுதான். இதன்மூலம் நாடு முழுவதும் இதை சார்ந்து பிழைத்து வந்தவர்களின் வாழ்க்கை அழியும். வாகனங்களுக்கு உரிமம், எப்.சி, வரிகட்டுதல் போன்ற அனைத்து வகையான பணிகளும் தேசிய போக்குவரத்து ஆணையம் மூலம் தனியாருக்கு சென்றுவிடும். அவர்கள் அதிகக் கட்டணம் வைத்து கொள்ளை அடிப்பார்கள். அரசு கார்ப்பரேட் நிறுவனங்களின் கொள்கை முடிவில் தலையிட முடியாது என விலகிக் கொள்ளும். இது மட்டுமல்ல, வாகனத்தை இயக்குவதற்கு குறைந்த கால அளவே அனுமதி வழங்கப்படும். பின்னர் அவைகளை பழைய இரும்புக் கடைக்கு தான் போட வேண்டும். அதிலும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மூக்கை நுழைத்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறு இம்மசோதாவின் ஒவ்வொரு வரியும் கார்ப்பரேட் நிறுவனங்கள் கொழுக்கும் வகையிலும், மாநில உரிமைகளுக்கு ஆப்படிக்கும் வகையிலும் உள்ளது. ●

# காஷ்மீருக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கும் தேவை 35ஏ சட்டப் பிரிவு

டெல்லியில் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று அரசியலமைப்பு சட்டப்பிரிவு 35ஏ-வை நீக்க வேண்டும் என்று டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இதனையே சாக்காக வைத்துக் கொண்டு 35 ஏ பிரிவு நீக்கப்பட வேண்டும் என்ற விவாதத்தை தொடங்கி வைத்துள்ளது பாஜக. உண்மையில் அக்கட்சியின் நீண்டநாள் கோரிக்கையும் இதுதான். அரசியலமைப்பு சட்டப்பிரிவு 35ஏ-ல் அப்படி என்னதான் உள்ளது? அதை நீக்க பாஜக இத்தனை ஆர்வம் காட்டுவது ஏன்?




எத்தனையோ சட்டங்கள் திருத்தப்பட வேண்டிய நிலையிலிருந்தும் அவற்றின் மீது எந்த விவாதத்தையும் தொடங்காத பாஜக இதில் மட்டும் அதிக ஆர்வம் காட்டுவது ஏன்? காரணம், அச்சட்டம் காஷ்மீர் மக்களின் இன அடையாளத்தையும் அவர்களின் தாயகத்தையும் சிறிதளவேனும் பாதுகாப்பதாக உள்ளது. அதிலும் குறிப்பாக காஷ்மீர் மக்களின் இறையாண்மை உரிமையை அடிப்படையாகக் கொண்டது.

1954 ஆம் ஆண்டு, அன்றைய இந்திய பிரதமராக இருந்த நேரு தலைமையிலான அமைச்சரவையின் பரிந்துரைப்படி குடியரசுத் தலைவர் உத்தரவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது இச்சட்டம். இச்சட்டத்தின்படி ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அசையாச் சொத்துக்கள் வாங்கும் உரிமை அம்மாநில மக்களுக்கே உண்டு. அதுமட்டுமல்லாமல் ஜம்மு - காஷ்மீரில் உள்ள அனைத்து வகையான வேலைவாய்ப்புகளிலும் காஷ்மீரிகளுக்குதான் இடம். பிற மாநிலத்தை சேர்ந்தவர்களுக்கு இடமில்லை. மேலும் காஷ்மீர் பெண்களை திருமணம் செய்யும் பிற தேசிய இன ஆண்களுக்கு சொத்துரிமை இல்லை. இதுதான் இச்சட்டத்தின் சாராம்சம்.

அதாவது, இச்சட்டம் குறைந்தபட்சமாவது காஷ்மீரிகளின் வேலைவாய்ப்பு, நிலம் போன்றவற்றை பிற மாநிலத்தை சேர்ந்தவர்கள் வாங்குவதற்கு தடையாக உள்ளது. “அகண்ட பாரத” கனவுடன் உள்ள பாஜகவிற்கு இச்சட்டம் கண்ணை உறுத்துகிறது. அதனால் தான் இதனை நீக்க வேண்டும் என்று கூச்சலிடுகிறது. `அரசியலமைப்பு சட்டப்பிரிவு 14 அனைவரும் சமம் என்று கூறுகிறது. ஆனால், சட்டப் பிரிவு 35ஏ படி காஷ்மீரில் காஷ்மீரிகளுக்கு முன்னுரிமை என்றாகிறது' என்றும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 19 படி “வாழ்வதற்கான உரிமை” இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் உள்ளது என்றும் இச்சட்டம் பெண்களுக்கான உரிமைகளை மறுக்கிறது என்றும் இந்துத்துவ வாதிகள் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

ஆனால் 35ஏ சட்டப்பிரிவு தனிமனித உரிமை பற்றியதல்ல, அது காஷ்மீரிய தேசிய இனத்தின் மண்ணுரிமை பற்றியது. ஒரு தேசிய இனத்துக்கு அதன் மொழியும் அம்மொழி பேசும் மக்களின் தாயகப் பகுதியும் அடிப்படையானது. `இந்தியன்' என்ற இல்லாத - பொய்யான தேசியத்தின் பேரில் மார்வாடி, குஜராத்தி சேட்டுகள் உட்பட வேற்றினத்தவர் காஷ்மீரில் சொத்து வாங்கி குவித்து காஷ்மீரிகளின் தாயகம் என்ற அடையாளத்தையே அழித்துவிடாமல் பாதுகாக்கிறது 35ஏ சட்டம்.

இந்திய மார்வாடி, பனியா, சேட்டு முதலாளிகளைப் பொருத்தளவில் தேசியஇன, மொழி அடையாளங்களை அழித்து விட்டு ஒற்றை இந்தியாவை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அதன்மூலம் தனக்கு மிகப்பெரிய பரந்துவிரிந்த சந்தை கிடைக்கும் என்பதை மையமாகக் கொண்டு செயல்படுகின்றனர். ஆர்எஸ்எஸ் - பாஜக பார்ப்பனிய சக்திகளைப் பொறுத்தளவில் அதன் இந்து பார்ப்பனிய - அகண்ட பாரத கனவுக்கு தேசிய, மொழி, இன அடையாளங்கள் மிகப்பெரிய தடைக்கல்லாக உள்ளது. எனவே, இத்தகைய தேசியஇன அடையாளங்களை ஒழித்துவிட்டு அகண்ட பாரதத்தை உருவாக்கும் வெறியோடு செயல்பட்டு வருகின்றன.




ஏற்கனவே, இந்தியாவிலிருந்தும், பங்களாதேசத்திலிருந்தும் அதிக அளவு இடம்பெயர்ந்தவர்கள் காரணமாக வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மண்ணின் மைந்தர்கள் சிறுபான்மையினராக மாறியுள்ளனர். அதுபோலவே தேசிய இன போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளில் திட்டமிட்டே பிற தேசிய இனத்தைச் சார்ந்தவர்களை அதிக அளவு குவித்து அம்மக்களின் விடுதலைப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்கிறது இந்திய அரசு.

மேற்கண்ட பிரச்சனை காஷ்மீருக்கு மட்டுமல்ல தமிழகத்துக்குதான். காஷ்மீரில் குறைந்தபட்சம் ஒரு சட்டப் பிரிவு அவர்களின் தாயக உரிமையை பாதுகாக்கிறது. ஆனால் தமிழகத்திற்கு இதுபோன்ற எந்தவொரு சட்டப்பிரிவும் இல்லை. இதனால்தான் தமிழகத்தில் வகைதொகையில்லாமல் மார்வாடிகள், பனியாக்கள் வந்து தமிழர்களின் நிலங்களையும், சிறு தொழில்களையும், வணிகத்தையும் கைப்பற்றி உள்ளனர். மேலும், அதிக அளவில் வந்து குவியும் வடமாநிலத் தொழிலாளர்களால் தமிழக மக்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகிறது. ஏற்கெனவே தமிழ்மொழி அரசு அலுவலகங்களில் இருந்தும் கல்விக்கூடங்களில் இருந்தும் விரட்டப்பட்டு வருகின்றது. தாயகப் பகுதியையும் தமிழினம் இழந்து வருகிறது. எனவேதான் சொல்கிறோம் 35ஏ சட்டப்பிரிவை காஷ்மீரத்துக்கு மட்டுமின்றி தமிழ் தேசம் உட்பட இந்திய ஏகாதிபத்தியத்தில் கட்டுண்டுள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் கொண்டு வரவேண்டும். ●

## கார்ப்பரேட் கொள்ளைக்கும் - பார்ப்பனியக் கொள்கைக்கும்

# உயர்கல்வி ஆணைய மசோதா

1956 ஆம் ஆண்டு இந்திய அரசால், பல்கலைக் கழக கல்வியினை ஒருங்கிணைக்கவும், தரக்கட்டுப்பாடு செய்யவும், பல்கலைக் கழகங்களுக்கு நிதி வழங்குதல் மற்றும் நேரடி ஆய்வின் மூலம் மதிப்பீடு செய்து தரத்தை உத்தரவாதப் படுத்துவது போன்றவற்றிற்காக துவங்கப்பட்டதே பல்கலைக்கழக மானியக் குழு(UGC). அதனை கலைத்து விட்டு தேசிய உயர்கல்வி ஆணையத்தை கொண்டுவருகிறது மோடியின் அரசு. பல்கலைக்கழகங்களின் தரத்தை உயர்த்தவே தேசிய உயர்கல்வி ஆணையம் கொண்டு வரப்படுகிறது என அரசு தரப்பில் கூறினாலும் உண்மை அதுவல்ல. பல்கலைக்கழக மானியக் குழு தன்னாட்சி பெற்ற அமைப்பு. அதன் அதிகாரத்தில் அரசாங்கம் அதிக அளவில் குறுக்கிட முடியாது என்பதால் அரசு தன்னுடைய சித்தாந்தங்களை, கொள்கை முடிவுகளை தன் விருப்பம் போல் செயல்படுத்த முடிவதில்லை. கல்விநிலையங்களுக்கு தன்னாட்சி அளித்தல், கல்வியில் கார்ப்பரேட்டுகளை அனுமதித்தல், மானியங்களைக் குறைத்தல், இந்தி - சமக்கிருதத்தை திணித்து பார்ப்பனியமயமாக்குதல் போன்றவற்றை தீவிரப்படுத்தியுள்ள மோடி அரசு இவற்றை தடையில்லாமல் செயல்படுத்தவே தேசிய உயர்கல்வி ஆணையத்தை அமைக்கவுள்ளது.

முழுக்க அதிகாரிகளை கொண்டு அமைக்கப்படவுள்ள இவ்வாணையத்தின் தலைவரும் அதிகாரிகள் மூலமே தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் வெளிநாடு வாழ் இந்தியராகவும் இருக்கலாம். மேலும் குழுவில் ஆசிரியர்கள் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டு மத்திய மாநில அதிகாரிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படவுள்ளது. இதன் மூலம். அரசின் தலையீடு இல்லாத பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தில் உள்ள வாய்ப்புகள் அனைத்தையும் ஒதுக்கிதள்ளப்பட்டுள்ளது. இந்த ஆணையம் முழுக்க கல்வி தொடர்பான பணிகளை மட்டுமே கவனிக்கும். நிதி ஒதுக்குதல் போன்றவற்றை மனிதவள மேம்பாட்டுத்துறை எடுத்துக் கொள்ளும்.

மேலும் கல்வி நிதி ஒதுக்கீட்டை தேசிய அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டு கவுன்சில் (NAAC) உடன் இணைப்பது போன்ற முன்மொழிவுகள் உள்ளது. இது புதிய கல்வி நிலையங்கள் மற்றும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கல்வி நிலையங்களுக்கு எதிரானதாகவும், அதன் வளர்ச்சியில் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

உயர்கல்வி நிறுவனங்களுக்கு தன்னாட்சி அங்கீகாரம் அளித்தாலும் அதனுடைய அதிகாரம் முழுமையும் உயர்கல்வி ஆணையத்திடமும், மத்திய அரசிடமே இருக்கும். மேலும் ஆலோசனை, விசாரணை அல்லது ஆணையத்தின் முடிவுகளை எதிர்த்து மேல் முறையீடு செய்வது போன்ற எந்தவொரு அதிகாரமும் தனிப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. உயர்கல்வியில் உயர்கல்வி ஆணையம் மற்றும் மத்திய அரசு மட்டுமே சர்வாதிகாரம் கொண்ட சட்டங்களை தன்னகத்தே கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இது உயர்கல்வியில் ஊழலை பெருக்கவும் , கல்வியை உலக சந்தைக்கு திறந்துவிடவுமே வழிகோலும்.

தனியார்மயம், தாராளமயம் மற்றும் உலகமயம் போன்றவற்றால் கல்வி பெரும் வணிகமாகியுள்ள சூழலில் அதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையிலும், கார்ப்பரேட்களுக்கான சந்தையை திறந்துவிடும் வகையில் மட்டுமே உள்ளது உயர்கல்வி ஆணையம். மேலும் உழைக்கும் வர்க்கத்தை சேர்ந்த மாணவர்களை உயர்கல்வியிலிருந்து வெளியேற்றி பணம் உள்ள மேட்டு குடியினருக்கு மட்டுமே கல்வி எனும் நிலையை இது உருவாக்கும்.

மோடி அரசானது ஏற்கனவே தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை தொழில்நுட்ப கல்லூரிகளில் நிறுத்திவிட்டது. அரசுக்கல்லூரிகளில் உதவித்தொகையை குறைத்துவிட்டது. அரசாணை 92 மூலம்கிடைத்து வந்த இலவசக் கல்விக்கும் குழி பறித்து விட்டது. பாதிக் கட்டணத்தை மாணவர்களே கட்ட வேண்டுமென சட்டத்தை மாற்றிவிட்டது. இவ்வாணையம் இத்தகைய உரிமைகளையும் பறிப்பதோடு இடஒதுக்கீடு உரிமையை முற்றாக ஒழித்துக்கட்டிவிடும். இந்திய பார்ப்பனக் கல்வி முறையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உயர்கல்வி முழுமையாக சென்று சேராத நிலையில் இது போன்ற ஆணையங்கள் அவர்களை கல்வியிலிருந்து திட்டமிட்டே வெளியேற்றும் நடவடிக்கை ஆகும். மேலும், மாநில பல்கலைக்கழக நிதியைக் குறைத்து மெதுவாக உயர்கல்வியிலிருந்து அரசே விலகிக் கொள்ளும். இலாப வெறிபிடித்த கார்ப்பரேட் நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களை கபளீகரம் செய்யும். இன்னும் தொட்டங்கப்படாத 'ஜியோ' கல்வி நிறுவனத்திற்கு 5000 கோடியை ஒதுக்கியதிலிருந்தே இவர்களின் இலட்சணத்தை நாம் புரிந்துக் கொள்ள முடியும்.

தற்போது உள்ள பல்கலைக்கழக மானியக் குழுவும் உயர்கல்வியில் மாநில உரிமைகளை பறிப்பதையும், தனியார்மயமாக்களையும் தான் செய்துவந்தது. மிக மோசமான நிலையில் உள்ள உயர்கல்வியை படுமோசமான நிலைக்கு கொண்டு செல்லத்தான் இந்த 'உயர்கல்வி ஆணைய மசோதா'.

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவதன் மூலமே இத்தகைய தனியார்மய, பார்ப்பனியமய நடவடிக்கைகளை தற்காலிகமாகவாவது தடுக்க முடியும். ●

## இயற்கையின் தவறா? மனிதத் தவறா?

# கேரளா வெள்ளப் பேரழிவு விடுக்கும் எச்சரிக்கை

கடவுளின் தேசம் என்று கொண்டாடப்பட்ட கேரளம் ஒருமாத காலமாக சாத்தானின் தேசமாக மாறிக்கிடக்கிறது.

கேரளா தனது வரலாற்றில் இதுவரை சந்தித்திராத மிகப்பெரிய வெள்ளப் பெருக்கை சந்தித்திருக்கிறது. கேரள மக்கள் இவ்வெள்ளப்பெருக்கின் காரணமாக மிக மோசமான பேரழிவை சந்தித்துள்ளார்கள். தங்கள் உடமைகளை, உயிர்களை இழந்து தவிக்கிறார்கள். கேரளா முழுவதும் மொத்தம் 5645 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, சுமார் 12,47,496 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். கேரளா முழுவதும் வழக்கத்தைவிட 41% அதிகமான மழைப்பொழிவும், இடுக்கி மாவட்டத்தில் மட்டும் 89% அதிகமாக மழைப்பொழிவும் ஏற்பட்டது. மொத்தமாக வெள்ளப்பெருக்கின் காரணமாக 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளன.

கேரளாவில் ஏற்பட்ட இந்த வெள்ளப்பெருக்கை முதலில் இந்திய அரசு தேசிய பேரிடராக அறிவிக்கவில்லை. அதன்பின் ஏற்பட்ட மக்களின் போராட்டத்தின் காரணமாகவும், கேரள மக்களின் எதிர்ப்புணர்வின் காரணமாகவும் வேறுவழியின்றி இதனை தேசியப் பேரிடராக அறிவித்தது. ஒரு தேசிய பேரிடர், பேரழிவு ஏற்பட்டால் மொத்த நிர்வாகத்தையும் அதில் முடக்கி சரி செய்ய வேண்டும். ஆனால் மோடி அரசு மீட்பு பணிகளுக்கு வெறும் 400 ராணுவ வீரர்களை மட்டும் அனுப்பியது. இதனுடன் 100 படகுகளை சேர்த்து அனுப்பியது. இப்பேரழிவிற்கு முதலில் 500 கோடியும், அதன்பின் 100 கோடியும் என மொத்தம் 600 கோடி மட்டுமே கொடுத்தது. கேரள முதலமைச்சர் 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், முதல் கட்டமாக 2000 கோடி ரூபாய் அளவுக்கு நிதி தேவை என்று கூறியும் அதனை பொருட்படுத்தாமல் வெறும் 600 கோடி மட்டுமே கொடுத்தது. அதுமட்டுமல்லாமல் ஐக்கிய அரபு அமீரகம் 700 கோடி ரூபாய் உதவி செய்வதாக அறிவித்தது. அந்த நிதியை கூட சட்டப்படி வாங்க முடியாது என்று மறுத்த மோடி அரசு கத்தார், தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகள் உதவ முன்வந்தும் அதையும் மறுத்தது. ஆனால் இதே மோடி தான் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது கடந்த 2000மாவது ஆண்டில் ஏற்பட்ட குஜராத் நிலநடுக்கத்தின் பாதிப்புகளை சரிசெய்ய அனைத்து வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக்கொண்டார்.

குஜராத்தில் வல்லபாய் பட்டேல் சிலை அமைக்க 2063 கோடியும், மகாராஷ்ட்ராவில் சிவாஜி சிலை அமைக்க 3,600 கோடியும் செலவு செய்யமுடிகிறது. மோடியின் சுற்றுப் பயணத்துக்கு 1000 கோடியும், விளம்பரங்களுக்கு 4300 கோடியும் செலவு செய்யமுடிகிறது. இன்னும் திறக்கப்படாத 'ஜியோ யுனிவர்சிட்டி' க்கு 5000 கோடி நிதி ஒதுக்கமுடிகிறது. ஆனால், அனைத்தையும் இழந்து நிர்கதியாக நிற்கும் கேரள மக்களுக்கு 2000 கோடி கூட கொடுக்க முடியவில்லை இவர்களால்.




இருப்பினும் பிற மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கொடுத்த தொகை கிட்டத்தட்ட 715 கோடி அளவிற்கு சேர்ந்து உள்ளது. இது மட்டுமல்லாமல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கேரளாவிற்கு நிவாரண உதவிகள் தொடர்ச்சியாக சென்று கொண்டு உள்ளது.



இந்தப் பேரழிவிற்கு என்ன காரணம்?

கேரளாவில் கிட்டத்தட்ட 55 பெரிய அணைகளும் 200 சிறு அணைகளும் இருக்கின்றன. பெருமழை காரணமாக 50க்கும் மேற்பட்ட அணைகள் ஒரே சமயத்தில் திறக்கப்பட்டதன் காரணமாகத்தான் இதுபோன்ற ஒரு மிகப்பெரிய பேரழிவை கேரளா சந்தித்தது. (ஆனால் பினராயி விஜயன் தலைமையிலான இடது முன்னணி அரசு, முல்லைப் பெரியாறு அணையில் இருந்து திறந்து விட்ட நீரின் காரணமாகத்தான் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாக கூசாமல் உச்சநீதிமன்றத்தில் பொய் கூறியது. இதன் மூலம் தமிழர்களின் பேருதவியினால் தமிழ் மக்கள் மீது மலையாளிகளுக்கு ஏற்பட்ட பற்றுதலை சிதைக்கும் வகையில் இன வாதத்தை விதைத்தது.)

மேலும் சமவெளிகளில் நெல்வயல்கள் அழிக்கப்பட்டு கான்கிரீட் கட்டட காடுகளாக்கப்பட்டிருப்பதால் எங்கும் வெள்ளக்காடானது. மேற்கு மலைத் தொடர் பாதுகாக்கப்படாமல் வளர்ச்சி மற்றும் சுற்றுலா என்ற பெயர்களில் அரசு அதிகாரிகளும் முதலாளிகளும் அரசியல் புள்ளிகளும் நடத்தும் சட்டபூர்வ மற்றும் சட்டவிரோத



நடவடிக்கைகள் காரணமாகவும் தேவைக்கு அதிகமான அணைக்கட்டுகளின் காரணமாகவும் பெரும் நிலச்சரிவுகளை கேரளம் சந்தித்து உள்ளது. உருப்படியாக நீர்மேலாண்மையை செய்திருந்தாலோ, வானிலை முன்னெச்சரிக்கையை கவனத்தில் கொண்டு அணைகளில் முறையாக நீரை திறந்துவிட்டிருந்தாலோ இத்தகைய பேரழிவிலிருந்து கேரளா தப்பியிருக்கலாம். ஆனால், தமிழகம் உட்பட அண்டை மாநிலங்களுக்கு சேர வேண்டிய தண்ணீரை கொடுக்காமால் பேராசையுடன் செயல்பட்டு வருகிறது கேரள அரசு. மழைநீர் அதன் போக்கில் சென்று கடலில் கலக்கவிடாமல் பல்வேறு தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

இவை மட்டுமில்லை கேரள வெள்ளப் பெருக்கிற்கு அடிப்படையான காரணமாக பருவநிலை மாற்றமும் ஆகும். அதாவது மிகக் குறுகிய காலகட்டத்தில் அதிக அளவு மழை பொழிவு. உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இருக்கிறது. கேரளாவில் ஏற்பட்டது போலவே தைவான் நாட்டிலும் தற்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இத்தகைய பருவநிலை மாற்றத்திற்கு முதன்மையான காரணமாக உள்ளது புதைபடிவ எரிபொருட்களான டீசல், பெட்ரோல், மீத்தேன் மற்றும் நிலக்கரி போன்றவையாகும். இப்புதைப்படிவ எரிபொருட்களை தடை செய்ய வேண்டும் என்று உலகம் முழுதும் உள்ள மக்கள் போராடிக் கொண்டுள்ளனர். ஆனால் இந்திய அரசு பெட்ரோல், டீசல், மீத்தேன் மற்றும் நிலக்கரி போன்றவற்றில் பல லட்சம் கோடிகளை பல்வேறு தேசிய இனங்களின் நிலப்பரப்பிலிருந்து கொள்ளை அடித்துக் கொண்டு செல்கிறது. மக்களுக்கு இதனைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டால், இந்திய அரசுக்கு எதிரான மிகப்பெரிய அளவு மக்கள் போராட்டம் ஏற்படும். ஆகவே இதுபோன்ற விவரங்களை மக்களுக்குத் தெரிவிப்பதில்லை. மேலும் உலகம் முழுவதும் நடைபெறும் பருவநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகள் போல, இந்தியாவில் நிதி ஒதுக்கி ஆய்வுகள் எதையும் செய்யவில்லை. காரணம் இந்தியா முழுக்க கிடைக்கும் புதைபடிவ எரிபொருட்களை கொள்ளையடிப்பதும் அதனை கார்ப்பரேட்களுக்கு தாரை வார்ப்பதும் தான் இந்திய அரசின் நோக்கம். இதை எதிர்த்து தனது வளங்களைப் பாதுகாக்க மாநில அரசுக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை.

இந்திய அரசு தேசிய இனங்களின் மீது ஜிஎஸ்டி உட்பட பல்வேறு வகையான வரிகளை விதித்து, அவற்றின் இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து கொண்டு செல்கிறது. மக்கள் புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும்போது அதனை கண்டுகொள்வதில்லை. உண்மையில் கேரளா பேரழிவு ஒரு தெளிவான அரசியலை கேரள மக்களுக்கு கொடுத்துள்ளது. அதாவது அவர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் இந்திய அரசின் கொடூர முகத்தை அறிந்து கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தங்களுடைய நிலத்தையும் வளத்தையும் பாதுகாக்க இறையாண்மை அதிகாரம் உள்ள சொந்த தேசிய அரசு தேவை என்பதை இந்த வெள்ள பேரழிவுகளும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும், மக்களுக்கு உணர்த்தியுள்ளது. ●

## செய்தியும் ● பார்வையும்

**செய்தி :** நீலகிரி மாவட்டம், மசினகுடியில் யானை வழித்தடங்களை ஆக்கிரமித்து விதிகளை மீறிக் கட்டப்பட்ட 27 தங்கும் விடுதிகளை மூட உச்சநீதிமன்றம் உத்தரவு

**பார்வை :** இந்த 27 தங்கும் விடுதிகள் கட்ட அனுமதி அளித்து, தண்ணீர் இணைப்பு, மின் இணைப்பு, சாலை என அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து இதுநாள் வரை அவ்விடுதிகள் இயங்க அனுமதித்த அரசு அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது இந்த நீதிமன்றம்?

கோவை, வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் இதே யானை வழித்தடத்தை ஆக்கிரமித்துக் கட்டியுள்ள கஞ்சா சாமியாரின் `ஆன்மீக' மடத்தை மூட உத்தரவிடுமா இந்த நீதிமன்றம்?

**செய்தி :** வங்கியில் வாங்கிய 9000 கோடி கடனை ஏமாற்றிவிட்டு இலண்டனுக்கு தப்பி ஓடிய விஜய் மல்லையா `இந்திய சிறை மோசமாக உள்ளது' என தெரிவித்துள்ளார். இதனால் மல்லையா அடைக்கப்படும் மும்பை சிறையை அனைத்து வசதிகளுடன் சுத்தமாக வைக்கவும், அதனை வீடியோ எடுத்து அனுப்பவும் இலண்டன் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி சிபிஐயினர் நல்ல வெளிச்சமான, தனி கழிப்பறையுடன், சுத்தமான படுக்கையுடன் மல்லையா அடைக்கப்படவுள்ள 12ஆம் எண் அறையை வீடியோ எடுத்து இலண்டன் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளனர்.

**பார்வை :** மோசடி மன்னன் மல்லையாவுக்கு இத்தனை வசதிகள். (இதற்கு அவனை வீட்டிலேயே தங்க வைத்துக் கொள்ளலாம்) ஆனால், மக்களுக்காகப் போராடி சிறை செல்பவர்களுக்கு கழிப்பறைதான் சிறைச்சாலை, தனிமை கொட்டடி, இருட்டறை, இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள்.

**செய்தி :** ராமர் கோயில் கட்டப்போவதாகக் கூறி, இந்துக்களின் வாக்குகளை திரட்டுவதற்கு உத்தரப்பிரதேச முதல்வர் ஆதித்யநாத் திட்டம் தீட்டிவருகிறார். இந்நிலையில், நாளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விஷ்ணு பெயரில் நகரம் உருவாக்கி, அங்கு விஷ்ணு-வுக்கு பிரம்மாண்ட கோவில் கட்டுவோம் என முன்னாள் முதல்வர் அகிலேஷும் போட்டியில் இறங்கியுள்ளார்.

**பார்வை :** இதுதான் வட மாநிலங்களில் நடைபெறும் அரசியல். பிற மதத்தினரின் கோயில்களை இடிப்பது. பார்ப்பனிய கடவுள்களின் கோயில்களை கட்டுவது. கட்சி தலைவர்கள் கோயில் கோயிலாக சுற்றுவது. பிற்போக்கு, மூடநம்பிக்கை, சாதிவாதம் இவற்றை வைத்துத்தான் வட மாநிலங்களில் அரசியல் செய்ய முடியும்.


ஆனால், தமிழ்நாடோ இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. கோயிலையும், கடவுள்களையும் வைத்து இங்கு அரசியல் செய்யமுடியாது. இடுக்கீடு, சமூக சமத்துவம், பெண்விடுதலை போன்ற சமூகநீதிக் கொள்கைகளை பேசுவதும் அதற்காக போராடிய தலைவர்களை போற்றுவதும் தான் தமிழகத்தின் அரசியல். ஏனென்றால், தமிழ்நாடு பார்ப்பனியத்திற்கு நேரெதிரான மண், பார்ப்பனிய எதிர்ப்பின் குறியீடு, பெரியார் பிறந்த மண்!! ●

# பருவ நிலை மாற்றமும் அடிமைத் தமிழகமும் - பகுதி 2

*...சென்ற இதழ் தொடர்ச்சி*

**கடல்மட்ட உயர்வு**

பூமியில் இருந்து வெளியேற்றப்படும் கார்பன் அதிக அளவு வளிமண்டலத்தில் தங்குவதால், அது சூரியனில் இருந்து வரும் அகச்சிவப்பு கதிர்களை உள்வாங்கி கொண்டு வெப்பத்தை வெளியிடுகிறது. இதனால் தொடர்ந்து வளிமண்டலம் வெப்பமாகவே இருக்கிறது. இவ்வாறு வெப்பமாக இருப்பதால் துருவப் பகுதிகளில் இருக்கும் பனிப் பாளங்கள் உருகி கடலில் கலக்கிறது. உதாரணமாக வட துருவப் பகுதியான ஆர்டிக் வேகமாக உருகி வருகிறது. அடுத்த பத்து முதல் பதினைந்து ஆண்டுகளில் ஆர்டிக் கடல் பனி பாளங்கள் இல்லாத கடலாக மாறும் சூழல் உருவாகும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுகிறார்கள். இவ்வாறு உருகும் பனிப்பாளங்கள் என்பது பல லட்சக்கணக்கான மைல் அளவு பரப்பளவு கொண்டது. இவை உருகி கடலில் கலப்பதால் கடல் நீர் மட்டம் உயருகிறது.






*அமெரிக்காவில் உள்ள நாசா வெளியிட்டுள்ள படம்*

இது எவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் கடல் மட்டம் உயர்ந்து வருவது பற்றியது ஆகும்.

இந்த கடல்மட்டம் உயர்வினால் பல சின்னஞ் சிறிய தீவுகள் இன்னும் சில ஆண்டுகளில் முழுமையாக கடலில் மூழ்கிவிடும். உதாரணமாக மாலத்தீவுகள் அடுத்த முப்பது ஆண்டுகளில் கடலில் மூழ்கி இதுபோல எண்ணற்ற தீவுகளும், கடற்கரை ஒட்டிய நகரங்களும் கடலில் மூழ்கி விடும். இதனால் அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்கள் அகதிகளாக இடம்பெயர்க்கூடிய சூழல் ஏற்படும். இன்னொரு புறம் புவி வெப்பமடைதல் காரணமாக உயரமான மலைகளில் உள்ள பனிப்பாளங்கள் வேகமாக உருகுகின்றன. அதனால் என்ன என்று நீங்கள் கேட்கலாம்? இந்த பனிபாளங்கள்தான் பல ஆறுகள் உற்பத்தியாவதற்கு மிகப்பெரிய நதிமூலமாக உள்ளன.உதாரணமாக இமயமலையில் உள்ள பனிபாளங்கள் கங்கை,சிந்து,பிரம்மபுத்ரா மற்றும் பல வற்றாத ஜீவநதிகள் உற்பத்தியாவதற்கு மூலமாக உள்ளது. இமயமலையில் உள்ள பனிபாளங்கள் வேகமாக உருகி வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கீழ்கண்ட படத்தில் உள்ள காஷ்கவுல்ஸ் பனிப்பாளம் கனடா நாட்டின் செயின்ட் இலியாஸ் மலையில் அமைந்து உள்ளது.

இந்த பனிப்பாளம் உருகியதால் யான்கொன் என்ற ஆறு தனது வழித்தடத்தை எதிர் திசையில் மாற்றி உள்ளது. காஷ்கவுல்ஸ் பனிப்பாளமானது சிலிம் மற்றும் காஷ்கவுல்ஸ் ஆறுகளின் நீர் ஆதாரமாக உள்ளது. இதுபோல எண்ணற்ற ஆறுகள் தனது திசையை மாற்றும் அல்லது காணாமல் போகும் அபாயம் உள்ளன.

*தொடரும்...*

நாங்கள் ஒழுக்கத்தை வலியுறுத்தினால் சர்வாதிகாரிகளா? - மோடி.

# கொஞ்சம் மூத்திரம் பெய்து கொள்கிறேன்.

( வீரத் தமிழச்சியின் சவுக்கடி...சில திருத்தங்களுடன் )

இனி நான்

மாட்டுக்கறி சாப்பிட மாட்டேன்
நீட்டுக்காகப் போராட மாட்டேன்
பசுவைக் கொல்ல மாட்டேன்
குசுவையும் விட மாட்டேன்

ஸ்டெர்லைட்டுக்காக குண்டடிபட்டு
சாக மாட்டேன்
பெட்ரோல் விலை ஏறினால்
நியுட்ரினோ சோதனை செய்தால்
மூச்சுக் காட்ட மாட்டேன்.

எட்டுவழிச் சாலை போட்டால்
நடைபயணம் செல்ல மாட்டேன்
மீத்தேன் எடுத்தால் சத்தம் போட
மாட்டேன்
கோடிகோடியாய் மக்கள் பணத்தைக்
கொள்ளையடித்தால் ஒன்றும் சொல்ல
மாட்டேன்.

மலம் அள்ளும் தொழிலை ஒழிக்கச்
சொல்லிக் கேட்க மாட்டேன்
மணல் கொள்ளையையும்
கண்டு கொள்ள மாட்டேன்
காவிரியில் தண்ணீர் விடாவிட்டால்
வழக்குத் தொடுக்க மாட்டேன்

சொந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம்
கொடுத்தால்
வாய் திறந்து கேட்க மாட்டேன்
விவசாயிகள் தற்கொலை செய்து
கொண்டால்
யாரையும் பொறுப்பேற்கச் சொல்ல
மாட்டேன்

மீனவர்கள் கைது செய்யப் பட்டால்
உரிமைக்காக கொடி பிடிக்க
மாட்டேன்

ஒகி புயலில் `ஒருத்தரும் வரலே'
என்றால் ஆவணப் படம் எடுக்க
மாட்டேன்

ஈழத்திற்கு ஐநாவில் பேச மாட்டேன்
வெள்ள நிவாரணத்திற்கு நிதி திரட்ட
மாட்டேன்

பேராசிரியர்கள் பாலியல் தொல்லை
செய்தால்
காட்டிக் கொடுக்க மாட்டேன்.

இரத ஊர்வலத்திற்குக் குறுக்கே நிற்க
மாட்டேன்
தாடி வைக்க மாட்டேன்.

பொட்டு வைக்காமல் இருக்க
மாட்டேன்
வங்கிகளில் கல்விக்கடன் கேட்க
மாட்டேன்
சங்கிகள் என்று சொல்ல மாட்டேன்
காவி நிறம் பிடிக்காது எனத் தவிர்க்க
மாட்டேன்.

மாலை எட்டு மணிக்குமேல் எங்கும்
செல்ல மாட்டேன்.
பணமதிப்பிழப்பு செய்தாலும்
பண்பற்றவர்கள் எனக் கூற மாட்டேன்
.
மருத்துவமனைகளில் குழந்தைகள்
இறந்தாலும்
சொந்தச் செலவில் சிலிண்டர் வாங்க
மாட்டேன்.

கெயில் கொண்டு வந்தால்
மயிரேயென்று கத்த மாட்டேன்
சமூக விரோதிகள் என்றால்
சூடு சுரணை பார்க்க மாட்டேன்.

வெளிநாட்டுக்குத்
தப்பியோடியவர்களைத்
திரும்பக் கொண்டுவரச் சொல்லிக்
கேட்க மாட்டேன்.

அனைத்துச் சாதியினரும்
அர்ச்சகராகக் கேட்க மாட்டேன்.

தீட்டுக் காலத்தில் கோவிலுக்குப்
போக மாட்டேன்.

இந்தித் திணிப்பு செய்தால்
மொழிப் போராட்டம் நடத்த
மாட்டேன்.

புருஷன் செத்தால் மறுமணம்
செய்து கொள்ள மாட்டேன்

ஊருக்குள் வரவிடுங்கள் எனக் கேட்க
மாட்டேன்

சமத்துவச் சுடுகாடு ஒருபோதும்
கோரமாட்டேன்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட
பார்வையோடு நடக்க மாட்டேன்
வன்புணர்வு செய்தாலும் எதிர்ப்புக்
காட்ட மாட்டேன்

சேரி நக்சலாக இருக்க மாட்டேன்
தாமரை தவிர வேறு பூவைச் சூட
மாட்டேன்
சமூகநீதிப் பற்றிக் கவிதை எழுத
மாட்டேன்
அம்பேத்கரியம் பேச மாட்டேன்

இந்தி எழுத்துகளைத் தார்பூசி அழிக்க
மாட்டேன்.

கொடி பிடித்துக் கோஷம் போட
மாட்டேன்.
செத்தாலும் பௌத்தராகச் சாக
மாட்டேன்

கொஞ்சம் பொறுங்கள்
அவசரமாய் வருகிறது
உங்கள் ஒழுக்கத்தின்மீது
கொஞ்சம் மூத்திரம் பெய்து
கொள்கிறேன்.

*- கவிஞர் சுகிர்தராணி* ●

# நாளும் உயரும் பெட்ரோல் டீசல் விலையும் இந்திய அரசின் தோல்வியும்

பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து கடந்த சில நாட்களாக விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து வருகிறது. உலக அளவில் கச்சா எண்ணெய் விலை கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் மத்திய, மாநில அரசுகளின் வரி விதிப்புத்தான், பெட்ரோல் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்ற குற்றச்சாட்டு சரிதான் என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

2017 இல் ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு உரூ. 9.48 ஆக இருந்த கலால் வரியை உரூ. 21.48 ஆக உயர்த்தியது நடுவணரசு. அதே போல் டீசலுக்கு உரூ. 3.56 ஆக இருந்த கலால் வரியை நான்கு மடங்கு அதாவது உரூ. 17.33 ஆக உயர்த்தியது. மக்களுடைய கடும் எதிர்ப்பால் அக்டோபர் 2017 இல் ஒரு 2 உரூ. குறைக்கப்பட்டது.

இப்படி அநியாயமாக வரி விதிக்கும் பா.ச.க அரசு பெட்ரோலியப் பொருட்களை சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) யின் கீழ் கொண்டுவந்தால் விலையைக் குறைக்க முடியும் என்கிறது. மாநில அரசுகள் இதற்கு ஒத்துழைக்க மறுக்கின்றன என அபாண்டமாகக் குற்றம் சாட்டுகிறது. ஆனால் உண்மை நிலையோ வேறு. ஏற்கனவே ஜி.எஸ்.டி-யால் மாநில அரசின் வரி வருவாயில் சரி பாதிக்கு மேல் பிடுங்கிக் கொள்கிறது நடுவணரசு. இதனால் மாநில அரசுகள் வேட் எனப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட வரியை உயர்த்தவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறன. குறைந்த அளவாக 25% முதல் மிகையளவாக 39.54% வரை மாநில அரசுகள் வேட் வரியை விதிக்கின்றன. (தமிழ்நாட்டரசு பெட்ரோலுக்கு 27% இருந்து 34% ஆகவும், டீசலுக்கு 21.5% இருந்து 25% ஆகவும் மார்ச் 2017 இல் உயர்த்தியது.)

தன் வருமானத்திற்கு பெரும் ஆதாரமாக பெட்ரோல், டீசல் `வேட்' வருவாயை நம்பியிருக்கும் மாநில அரசுகள் ஜி.எஸ்.டியின் கீழ் பெட்ரோலிய பொருட்களை கொண்டு வர எப்படி ஒத்துக் கொள்ளும். இப்படி மாநில அரசுகளின் வருவாயை பிடுங்கிக் கொண்டு அவர்கள் மீதே குற்றம் சாட்டும் அய்யோக்கியத்தனத்தை பா.ச.க அரசால் மட்டுமே செய்ய முடியும்.

வரிவிதிப்பு மட்டுமல்லாமல் எண்ணெய் நிறுவனங்களின் கொள்ளையும் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாக உள்ளது. இந்தியாவில்

| | |
|---|---|
| 03 Sep 2018 | 82.34 |
| 02 Sep 2018 | 81.63 |
| 01 Sep 2018 | 81.63 |
| 31 Aug 2018 | 81.63 |
| 30 Aug 2018 | 81.40 |
| 29 Aug 2018 | 81.28 |
| 28 Aug 2018 | 81.14 |
| 27 Aug 2018 | 80.99 |
| 26 Aug 2018 | 80.74 |
| 25 Aug 2018 | 80.74 |

நாள்தோறும் எண்ணெய் நிறுவனங்களால் பெட்ரோல், டீசல் விலை மாற்றப்படுகிறது. உலக வணிகம் பெரும்பாலும் அமெரிக்க டாலர் மதிப்புகளில் நடைபெறுவதால், அதன் ஏற்ற இறக்கத்திற்குத் தகுந்தவாறு உள்நாட்டு நாணய பரிவர்த்தனை (Exchange Rate) மதிப்பும் மாறுகிறது. இதனால் இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் விலையும் மாறுகிறது. அதைத் தொடர்ந்து சில்லறை விற்பனை விலையும் மாற்றப்படுகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயரும் போது பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தும் எண்ணெய் நிறுவனங்கள் கச்சா எண்ணெயின் விலை குறையும் போது பெட்ரோல், டீசல் விலையை குறைக்க மறுக்கின்றனர். இக்கொள்ளை நிறுவனங்களுக்கு ஆதரவாகவே மோடி அரசும் செயல்படுகிறது.

மேலும், தன் நாட்டின் நாணயம் மதிப்பை இழக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நடுவணரசின் கடமை. நடுவணரசின் பன்னாட்டு கார்பரேட் பொருளாதாரக் கொள்கையினாலும், உலக வணிக அமைப்பின் (WTO) கைப்பாவையாகச் செயல்படுவதாலும், ஊதாரித்தனமான செலவுகளினாலும் இந்திய உருவாயின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது. உருவாயின் மதிப்பைக் காப்பாற்றக் கையாலாகாத நடுவணரசு மக்களின் மேல் தன்னுடைய நெருக்கடியைத் திணிக்கிறது.

தன் நாட்டு மக்களுக்கு பெட்ரோலியப் பொருட்களை அதிக விலைக்கு விற்கும் இந்த நடுவணரசு வெளிநாடுகளுக்குக் குறைந்த விலைக்கு விற்பதும் தற்போது அம்பலமாகியுள்ளது. அதுவும் இவர்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ரோகித் சப்ரவால் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை குறித்த விவரங்களைக் கேட்டு மத்திய அரசின் மங்களூரு பெட்ரோல் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்துக்குக் கடிதம் எழுதினார். 3 மாதங்களுக்கு முன்பு எழுதப்பட்ட கடிதத்துக்கு தற்போது அந்த நிறுவனம் பதில் அளித்துள்ளது. அதில்:

2018 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் முதல் ஜூன் 30 ஆம் நாள் முடிய அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, மலேசியா, மொரீசியஸ், சிங்கப்பூர், ஆங்காங், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட 15 நாடுகளுக்கு சுத்திரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த நாடுகளுக்கு ஒரு லிட்டர் பெட்ரோல் உரு. 32 முதல் உரு. 34 வரையிலும், ஒரு லிட்டர் டீசல் உரூ.34 முதல் உரூபாய் 36 வரையிலும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருந்ததாகவும் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கேட்கும்போது "பெற்றவள் பிச்சையெடுத்து அலையும்போது, பிள்ளை கும்பகோணத்தில் கோ தாணம் செய்தானாம்" என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

இந்த நாடுகள் அவர்களே கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து, சுத்திகரிப்பு செய்து பயன்படுத்திக் கொள்ளமுடியும். ஆனால் செய்வதில்லை. ஏனென்றால் அவர்கள் தங்கள் நாட்டில் மாசுபடுத்தும் ஆலைகளை அனுமதிப்பதில்லை. அதற்குத்தான் இந்தியா என்ற பெரிய குப்பைத் தொட்டி இருக்கவே இருக்கிறது. தமிழகத்தின் நீரையும், நிலத்தையும் நாசமாக்கி அமெரிக்க, ஐரோப்பியர்கள் வண்ண வண்ண ஆடைகள் உடுத்த திருப்பூர் நகரமே நாசமாக்கப் பட்டு விட்டது. வரலாற்று சிறப்பு மிக்க நொய்யல் ஆறு அழிக்கப்பட்டு இன்று ஒரு சாக்கடையாக மாற்றப்பட்டுவிட்டது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையால் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கும் மக்களை ஒரேயடியாகச் சாகச் சொல்லி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது இந்த அரசு.

கேட்டால் அந்நியச் செலாவணி ஆயிரங்கோடி கிடைக்கிறது என்பார்கள். நமது வளங்களைக் கொள்ளையடித்து, நீரையும் நிலத்தையும் நாசமாக்கி இவர்கள் ஈட்டும் அந்நியச் செலவாணி யாருக்குப் பயன்படுகிறது? அமைச்சர்களும், அதிகாரிகளும் உலகம் சுற்றவும், ஊர் மேயவும்தான் பயன்படுகிறது. தரகு முதலாளிகள் இங்கே கொள்ளையடித்த பணத்தில் வெளிநாட்டில் சொத்து வாங்கவும், உல்லாச வாழ்க்கை வாழவும்தான் பயன்படுகிறது. நமது ஏழை விவசாயிகளுக்கோ, மீனவ மக்களுக்கோ, இன்னபிற உழைக்கும் மக்களுக்கோ பயன்படுவதில்லை.

தமிழக மக்களும் உலகில் தலை நிமிர்ந்து, பெருமிதத்தோடு வாழ வேண்டும் என்று சொன்னால் இந்தத் தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்றால் மட்டுமே அது சாத்தியம். அதாவது தமிழக மக்கள் தங்களுக்கென்று ஒரு சனநாயகக் குடியரசை அமைத்துக் கொண்டால் மட்டுமே அது சாத்தியம். "நோய்நாடி நோய்முதல்நாடி அதுதீர்க்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்". எனும் வள்ளுவம், மருத்துவத்திற்கு மட்டுமல்ல; தாய்மண் விடுதலைக்கும் அதுதான். ●

# *கத்து உரக்கக் கத்து*

***- மனுஷ்ய புத்திரன்***

கத்து உரக்கக் கத்து
"பாஸிஸ்டுகள் ஒழிக"
தீப்பிடிக்கும் குரலால் கத்து
"பாஸிஸ்டுகள் ஒழிக"
தொண்டை நரம்புகள் அறுபட கத்து
"பாஸிஸ்டுகள் ஒழிக"

நாம் கத்தவேண்டும்
கூச்சமில்லாமல்
மனத்தடையில்லாமல்

நம் பொறுமையின் சுமையை
நம்மால் தாங்க முடியவில்லை
நம் சகித்துக்கொள்ளுதலின் முடை
நாற்றம்
நம்மை குமட்டச் செய்கிறது
கத்தினால் நம் கோபம் சற்றே எடை
குறையும்
நம் மன நிலை சற்றே சீரடையும்

கத்து
"பாஸிஸ்டுகள் ஒழிக"
நிராயுதபாணியான ஒரு பெண்
எப்படி துணிச்சலாக
உரத்துக்கத்தினானோ
விளைவுகளைப்பற்றி
கவலைப்படாமல் எப்படி உரத்துக்
கத்தினாளோஅப்படிக் கத்து

பாசிஸ்டுகள் நம்மை
தெருவில் பிச்சைகாரர்களாய்
அலைய வைத்தார்கள்



பாசிஸ்டுகள் மனிதர்களை
தெருவில் நிற்கவைத்து சுட்டார்கள்

பாசிஸ்டுகள்
மாட்டுத்தோலுக்குபதிலாக
நம் தோலை உரித்தார்கள்

பாசிஸ்டுகள்
எழுத்தாளர்களை
கொலை செய்தார்கள்

பாசிஸ்டுகள்
நீதி கேட்பவர்களை
பொய்
வழக்குகளில்கைது
செய்தார்கள்

பாசிஸ்டுகள்
ஊடகங்களின் வாயை
மூடினார்கள்

ஹிட்லர் அப்படித்தான்
செய்தான்
முசோலினி
அப்படித்தான்
செய்தான்
இந்த உலகை
இருளில் மூழ்கடித்த
பற்பல
கொடுங்கோலர்கள்
அப்படித்தான்
செய்தார்கள்.

நீ குரலை உயர்த்து
"பாஸிஸ்டுகள் ஒழிக"
நம் குரல்தான் நம் ஆயுதம்
நம் குரல்தான் நமக்கு பாதுகாப்பு
நம் குரல்தான் நம் வழித்துணை
ஒன்றை நீ புரிந்துகொள்
நாம் யாருமே இங்கே பாதுகாப்பாக
இல்லை

நீ முதலில் கத்து
"பாஸிஸ்டுகள் ஒழிக"
புதர் மறைவிலிருந்து
ஒவ்வொருவராக வெளியே வந்து
பலரும் கத்துவார்கள்
நீ கத்துவதைப் பார்த்து
உன் குழந்தைகள் உன்னோடு
சேர்ந்து கத்துவார்கள்
உன் பக்கத்துவீட்டுக்காரன்
பிறகு கத்துவான்
பிறகு தெருவாசிகள் கத்துவார்கள்.
பிறகு நகரவாசிகள் கத்துவார்கள்
பிறகு சிறுநகரவாசிகள் கத்துவார்கள்
பிறகு சிற்றூர்வாசிகள் கத்துவார்கள்
ஞானகூத்தன் கவிதை
இன்றுதான் புரட்டிப்போட வாய்த்தது
நாம் நாய்களல்ல மனிதர்கள்
என்றுசொல்ல
உரத்துக் கத்து

கோழைத்தனம் ஒரு ரகசிய நோய்
பயத்தின் சேற்றில் அதிகநேரம்
நின்றால்
நம் பாதங்கள் அழுகிவிடும்
தீமையின் பக்கம் இருப்பவர்கள்
அந்தத் தீமையாலேயே அழிவர்
இந்த இரவில்
நமது இந்தக் குரல்
இந்த நகரத்தின் வெற்றிடங்கள்
அனைத்தையும் நிரப்பட்டும்
"பாஸிஸ்டுகள் ஒழிக"

04.09.2018

#WeSupportSophia ●


# பொவேஇரா [ தோழர் பி.வி.ஆர் ] எனும் போராளி

பொன்னேரி வேணுகோபால் இராமானுசம் - புரட்சி
போர்புரியும் இளைஞர்களின் புத்தாக்க அருமருந்து
கார்முகில் சிந்தனையின் களங்கமில்லா
படைத்தலைவர்
சோதனைகள் சுட்டபோதும் சுடராய் ஒளிர்ந்தபொன்
மக்களுரிமைக் கழகத்தின் மகத்தான
பொதுச்செயலாளர்
சாதனைகள் படைத்தபோதும் தன்னிலை
திரியாதவர்
பள்ளிப் பருவத்திலே பரங்கியரை எதிர்த்தவர்
விடுதலைப் போரில் வீறுகொண்டு எழுந்தவர்
குறைந்த அகவையில் குடும்பத்தைத் தாங்கவேண்டி
பதின்ம அகவையிலே பட்டாளம் சேர்ந்தவர்

இந்தியப் பட்டாளத்தில் இணைந்து பணிசெய்தார்
கம்யூனிச மெய்மத்தை கருத்தாய் கற்றறிந்தார்
கமுக்கமாய் படையணிக்கு கற்றதைப் பரப்பினார்
பட்டாள வீரர்களுக்கு பாட்டாளி மெய்மமா?
பாழும்சிறையை பரிசாய் தந்தாள் பாரதமாதா

மக்களுக்குப் பணிசெய்ய படைப்பணி தடையானது
விருப்பஓய்வு பெற்று வெளியேறி வந்தவுடன்
திருப்பத்து ஊரிலே செயல்படத் திட்டமிட்டார்
கம்யூனிஸ்ட் கட்சிகளில் கரமிணைத்து
செயல்பட்டார்
தொழிலாளர் சங்கங்களை தோற்றுவித்து
செயல்பட்டார்
முப்பதுக்கும் மேற்பட்ட சங்கங்களின் செயலாளராய்
முனைப்புடன் செயல்பட்டார்! முடிவில்லாப்
பொருளியல்
போராட்டங்கள் மட்டுமே போதாது
என்றுணர்ந்தார்!
அரசியல் போராட்டமே ஆளும்வகுப்பின் அதிகாரம்
அழித்தொழிக்கும் என்ற ஆசான்கள் வழிநின்றார்!

பாட்டாளி வகுப்பு அனைத்ததிகாரமே பாமரர்க்கும்
பயனளிக்கும் பாதை என்று பகுத்தறிந்தார்!
புரட்சிகர அரசியலே பதியதோர் சமுதாயம்
புலர வழிவகுக்கும்! அரசியல் போராட்டமே
அடிமை விலங்கொடிக்கும்! சீர்திருத்த வாதங்கள்
சீரழிக்கும் என்றுணர்ந்தார்! புரட்சி மெய்மமின்றி
புரட்சி நடப்பதில்லை! புரிந்து கொண்டார்!
எழுபதுகளின் காலத்தில் இணைந்தார் மாலெயில்
நக்சல்பாரி உழவர்களின் நடுங்கவைத்த பேரெழுச்சி
நாட்டிற்கோர் பாதையை நன்று காட்டியது! -
ஆயினும்
படைக்கலப் போராட்டம் பாதைமாறிப் போனது
தனியாள் அழித்தொழிப்பே தலையாய
வேலைமுறை!
சாருவின் வழிமுறை தவறாய்ப் போனது!
உன்னத நோக்கங்கள் உருக்குலைந்து போனது!
வன்தொழில் எதிரிக்கு வாய்ப்பாய் ஆனது!
தியாகத்தின் விளைநிலம் திருப்பத்தூர் சிவந்தது!
தேவாரம் திருவாசகம் திவ்விய பிரபந்தங்கள்
எசமானர் விட்டெறிந்த எழும்பு துண்டுகளை



கவ்விய நாய்களாய்க் கடித்துக் குதறியது!
எவ்வளவோ எம்தோழர் எடுத்துரைத்தும்
பயனில்லை!
இழந்தோம் நமதருமை எண்ணற்ற வீரர்களை!

தனியாள் அழித்தொழிப்பு தவறென்ற கார்முகிலின்
மக்கள் திரள்வழியை மனதில் கொண்டுழைத்தார்
தமிழ்நாடு அமைப்புக் குழுதன்னில் இணைந்தார்
அவசரநிலைக் காலத்து அடக்குமுறை எதிர்த்தார்!
அப்புவும் சீராளனும் ஆளும் வர்க்கத்தால்
அடித்தே கொல்லப்பட்ட அநீதிக்குக்குரல்
கொடுத்தார்!

பொன்னேரி தொடங்கி புகழ்பெற்ற
திருப்பத்தூர்வரை
தன்னேரில்லா தநாஅகு தத்துவ வழிநடந்தார்!
அரசப் படுகொலைகளை அம்பலப் படுத்தினார்!
அரசே உசாவல்குழு அமைக்க வலியுறுத்தி
மனிதஉரிமைக் கழகத்தின் மறவனாய் திகழ்ந்தார்!

இந்தியப் பாசிசத்தை எதிர்த்துநின்ற மஉக
இயக்கத்தை வழிநடத்தி எரிமலையாய் எழுந்தார்!
இந்திய அரசே! ஈழப்போராளிகளை
இழிவுசெய்யாதே!
சிங்கள இனவெறிக்குத் துணைபோகாதே
என்றகட்சியின்
ஈழமக்கள் விடுதலையின் இயக்கத்தில்
இணைந்துநின்றார்!

இந்தியப் பொதுமைய இயக்கத்தின் ஏகாதிபத்தியப்
பொருளியல் கோட்பாட்டை புறந்தள்ளிய
கார்முகிலின்
புரட்சிகர தநாமாலெக போர்ப்படையில்
இணைந்தார்!
தமிழ்தேசிய விடுதலையே சனநாயகப் புரட்சியை
தமிழ்நாட்டில் நிறைவுசெய்யும் தத்துவ
நெறிநின்றார்!

போலிப் பகட்டுகளை புல்லென வெறுத்தவர்!
குடும்ப உறவுகளை கொள்கைக்காய் துறந்தவர்!
கொள்கை உறவுகளை கொண்டாடி போற்றியவர்!
கட்சிஉறவுகளை இருகண்கள் போல் காத்தவர்!
எட்டி உதைத்தாலும் இன்முகம் மாறார்!
குட்டிமுதலாளிய குறுகிய உறவுகளை வெறுத்தார்!
அரத்த உறவேயானாலும் அடியோடு மறுத்தார்!
அவர் உள்ளமோ வெள்ளை! உணர்வுகளோ சிவப்பு!
எழுச்சியில் அவர் ஒரு இமயம்!
எண்ணங்களில் அவர் ஒரு இளைஞன்!
தன்னை முன்னிறுத்தா தன்மையில் ஓர்தாய்!
தாநாமாலெக மகுடத்தில் ஒளிரும் ஓர்தாரகை!

இருபத்தெட்டு மேஇரண்டாயிரத்துப் பதினெட்டு
பூதவுடல் உறங்கியது! பூமியில் நிரந்தரமாய்! -
ஆயின்என்
புரட்சியாளர்கள் இப்பூமியில் உள்ளவரை
பொவேஇரா - எனும்
போராளி நினைவுகள் இப்பூமியில் அழியாது!
நினைவுகளை நெஞ்சிலேந்துவோம்! நிகரமைய
குமுகாயம்
நிலைத்து வளர்ந்தோங்கி பொதுமையம் ஆகும்வரை
போராளி நினைவுகள் பூமியில் அழியாது!
போற்றுவோம் புரட்சியாளன் பொவேஇரா
நினைவுகளை!
பொதுமையன் பொவேஇரா புகழ்வாழ்க! வாழ்க!!

*- புஇமு, கோவை*

## தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தில் நடைபெற்ற அரச பயங்கரவாதத்தை கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பாக நடைபெற்ற இயக்கங்கள் :

பெங்களூரில் 22.7.2018 ஞாயிறு அன்று காலை 11 மணிக்கு தொடங்கி மாலை 5 மணிவரை கண்டன அரங்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கருநாடக புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் குமரேசன் தலைமை தாங்கினார். தோழர் அன்பரசி வரவேற்புரை ஆற்றினார். பு.இ.மு.தோழர் செந்தமிழ் முருகன், சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா (எஸ்.டி.பி.ஐ) கருநாடக மாநில தலைவர் தோழர் இலியாஸ் முகமத் தும்பே, வழக்கறிஞர் தோழர் சிவமனிதன், தோழர் கல்விச்செல்வன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தோழர் சேகர், புரட்சிகர தொழிலாளர் முன்னணி(ஒசூர்) தோழர் மணிவாசகம், திராவிடர் விடுதலைக் கழகம் கருநாடகம் செயலாளர் தோழர் பழனி, ஓமியோபதி மருத்துவர் மூர்த்தி, தமிழ் ஆர்வலர் திரு ஆறுமுகம், தோழர் தமிழடியான், கருநாடக புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் எழிலன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். பாவலர்கள் எழுஞாயிறு, தோழர் வில்லாளன், தோழர் குமார் ஆகியோர் பா வாசித்தனர். தோழர் அம்மு, குமரேசன் தூத்துக்குடி துப்பாக்கி சூட்டைக் கண்டித்து பாடல்கள் பாடினார். நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர்.

சென்னையில் 05.08.2018 அன்று கண்டன அரங்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சீராளன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் த. வெள்ளையன், மதிமுக துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, தமிழ் தேசிய விடுதலை இயக்கம் தோழர் தியாகு, தமிழ் தேசிய முன்னணி துணைத்தலைவர் அய்யநாதன், எஸ்.டி.பி.ஐ மாநில செயற்குழு உறுப்பினர் கரீம், தோழர் ஆழி செந்தில்நாதன் (தன்னாட்சி தமிழகம்), தோழர் ஆனந்தன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), தோழர் அ.சி.சின்னப்ப தமிழர் (தமிழர் தமிழ் வழிக் கல்வி இயக்கம்), தோழர் த.லெனின் (சிபிஐ), தோழர் மதிவதனி (திராவிடர்கழகம்), தோழர் பரந்தாமன் (தந்தைப்பெரியார் திராவிடர் கழகம்), தோழர் சங்கரசுப்பு (மூத்த வழக்குரைஞர், சென்னை உயர்நீதிமன்றம்) தோழர் சிவக்குமார், தோழர் தமிழ் மறவன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை) தோழர் வாணிதாசன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி) தோழர் மு.வெற்றிச்செல்வன் (பூவுலகின் நண்பர்கள்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிகழ்ச்சியில் 350 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மதுரையில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்தது. இதனால், நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு 27.07.2018 அன்று கண்டன ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது.




பெங்களூரு



பெங்களூரு




சென்னை



சென்னை

முகவரி: 206, 3 ஆம் தளம், பாலாஜி வளாகம், கோபாலபுரம் முதல் தெரு, கோயமுத்தூர்-641018 முகநூல்: http://www.facebook.com/sen thooval